بسم الله الرحمن الرحيم نحمده ونصلي على رسوله الكريم وعلى عبده المسيح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 3

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

# பதர்

வார இதழ் - காதியான்

The Weekly **BADAR** Qadian TAMIL

இதழ் 48

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அ.கலீல் அஹ்மது

20 ரபீவுல் அவ்வல் 1440 ஹிஜ்ரி கமரி 29 நுபுவ்வத் 1397 ஹிஜ்ரி ஷம்ஸி

29 நவம்பர் 2018


## அல்லாஹ்வின் கட்டளை

يَٰٓأَيُّهَا الَّذِينَ آمَنُوا اتَّقُوا اللّٰهَ وَذَرُوا مَا بَقِيَ مِنَ الرِّبٰوا إِنْ كُنْتُمْ مُّؤْمِنِينَ ○ فَإِنْ لَّمْ تَفْعَلُوا فَأْذَنُوا بِحَرْبٍ مِّنَ اللّٰهِ وَرَسُولِهِ

நம்பிக்கை கொண்டவர்களே! இறைவனுக்கு அஞ்சுங்கள். நீங்கள் நம்பிக்கை கொண்டவர்களாயின், வட்டியி(ன் கணக்கி)ல் எஞ்சியிருப்பதை விட்டு விடுங்கள். நீங்கள் அவ்வாறு செய்யவில்லையாயின், அல்லாஹ்விடமிருந்தும் அவனது தூதரிடமிருந்தும் போரை உறுதி செய்து கொள்ளுங்கள். (2:279,280)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய –தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி –யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறுகின்றார்கள்: நூஹ் நபியின் கப்பல் என்ற நூலில் நமது போதனைகள் அடங்கிய பகுதி எங்கு உள்ளதோ அவற்றை கண்டிப்பாக ஒவ்வோர் அஹ்மதியும் படிக்க வேண்டும். இன்னும் கூறுவதென்றால், முழு நூலையும் படிக்க வேண்டும்**

**அறிவாளிகளே! இவ்வுலகமானது நிலையான ஓர் இடமல்ல. ஆகவே நீங்கள் எல்லா விதமான அநீதிகளையும் விட்டு விடுங்கள். போதையை விளைவிக்கக்கூடிய ஒவ்வொரு பொருளையும் விட்டொழித்து விடுங்கள். மனிதனை நாசமாக்கக் கூடியது மது மாத்திரம் அல்ல. மேலும் எப்போதும் வழக்கமாக்கிக் கொண்டிருக்கின்ற அபின், கஞ்சா, சரஸ், பங்கு, கள் முதலான போதைப் பொருட்களையும் நீங்கள் விட்டு விடுங்கள். அவை மூளையைக் கெடுத்து விடுவதுமட்டுமல்லாமல் இறுதியில் மனிதனையே அழித்து விடுகின்றன. ஆகவே இவற்றிலிருந்து நீங்கள் தப்பித்துக் கொள்ளுங்கள்**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்கள் எழுதிய கிஷ்தி நூஹ் (நூஹ் நபியின் கப்பல்) என்ற நூலிலிருந்து...

நீங்கள் பரிசுத்தவான்களாக ஆவதற்கு முயற்சியுங்கள். மனிதன் தானாகப் பரிசுத்தமான பின்னரே பரிசுத்தத்தைப் பெறுகிறான். இருப்பினும் நீங்கள் இந்த அருட்கொடையை எவ்வாறு பெறுவீர்கள்? இதன் விடையை இறைவனே திருக்குர்ஆனில் அளித்துள்ளான்.

وَاسْتَعِيْنُوْا بِالصَّبْرِ وَالصَّلٰوةِ அதாவது தொழுகையைக் கொண்டும் பொறுமையைக் கொண்டும் இறைவனிடம் உதவி தேடுங்கள். (2:46)

தொழுகை என்றால் என்ன? அது தஸ்பீஹ் (இறைத் தூய்மையை எடுத்துரைத்தல்) தக்தீஸ் (இறைப் பரிசுத்தத்தை நினைவு கூர்தல்) தம்ஹீத் (இறைவனைப் புகழ்தல்) இஸ்திஃபார் (பாவமன்னிப்புக் கோருதல்) மேலும் துரூத் (ஸலவாத்து ஓதுதல்) ஆகியவற்றைக் கொண்டு மன உருக்கத்துடன் செய்யும் பிரார்த்தனையாகும்.

ஆகவே, நீங்கள் தொழும்போது அறியாத மக்களைப் போன்று அரபு மொழியில் மாத்திரம் உங்களது துஆக்களைக் கேட்க வேண்டாம். ஏனெனில் அறியாதவர்களின் தொழுகை அவர்களது இஸ்திஃபார் அகிய அனைத்தும் வெறும் சடங்குகளும் சம்பிரதாயங்களுமாகும். அவற்றில் எவ்வித உண்மையும் இல்லை. ஆயினும் உங்களது இதயங்களில் பணிவும் மன்றாடுதலும் நல்ல விதம் உண்டாகும் பொருட்டு நீங்கள் தொழும்போது இறைவனது வசனமாகிய திருக்குர்ஆனையும், பெருமானார் (ஸல்) அவர்கள் அருளிய சில துஆக்களையும் தவிர உங்களது மற்ற எல்லா துஆக்களையும் உங்கள் சொந்த மொழியிலேயே மன உருக்கத்துடன் கேட்டு வாருங்கள்.

ஐந்து நேரத் தொழுகைகள் என்றால் என்ன? அவை உங்களின் பல்வேறு நிலைகளின் சித்திரமாகும். இவை ஆபத்தான சமயங்களில் உங்களது வாழ்க்கையில் உங்கள் மீது உண்டாகக்கூடிய அவசியமான ஐந்து மாற்றங்களாகும். உங்களின் இயல்புக்கு அவை அமையப் பெறுவது மிகவும் அவசியமாயிருக்கிறது.

உதாரணமாக, உங்கள் மீது ஏதாவது ஆபத்து வரப்போகிறதாக முதலில் உங்களுக்கு அறிவிக்கப்படும்போது உங்களின் பெயரில் நீதிமன்றத்திலிருந்து ஒரு வாரண்ட் அனுப்பப்படுகிறது. இது உங்களுடைய திருப்தியிலும் சுக வாழ்விலும் இன்னலை விளைவித்த முதல் நிலையாகும். ஆகவே இந்நிலை சூரியன் கீழ்வானை நோக்கிச் சரியக்கூடிய நேரத்திற்கு ஒப்பானதாக இருக்கிறது. ஏனெனில் இதனால் உங்களின் சுக வாழ்வில் சரிவு உண்டாகத் தொடங்கியது.

இதற்கு நேர் எதிராக லுஹர் என்னும் பகல் தொழுகை தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன் நேரம் சூரியன் கீழ்வானை நோக்கிச் சரியும் சமயத்திலிருந்து ஆரம்பமாகிறது. ஆபத்திற்குரிய இடம் நெருங்கும்போது இரண்டாவது நிலை உங்களிடையே உருவாகிறது. உதாரணமாக, நீங்கள் வாரண்ட் மூலமாக கைது செய்யப்பட்டு நீதிபதிக்கு முன் கொண்டு வரப்படுகிறீர்கள்.

இது உங்களுக்குள் ஏற்படும் அச்சத்தினால் இரத்தம் வரண்டு போவதற்கும், நிம்மதி என்னும் ஒளி உங்களிலிருந்து மறைந்து போவதற்குமானதொரு சமயமாகும். ஆகவே இந்நிலையானது சூரியனிலிருந்து ஒளி குறைந்து அதன்மீது உங்கள் பார்வை பதியக்கூடிய, அதன் மறைவு நெருங்கிக் கொண்டிருப்பது தெளிவாகத் தென்படுவதற்குமுன்ன நேரத்திற்கு ஒப்பானதாகும்.

இந்த ஆன்மீக நிலைக்கு நேர் எதிராக அஸ்ர் என்னும் பிற்பகல் தொழுகையானது நியமிக்கப்பட்டுள்ளது. இந்த ஆபத்திலிருந்து விடுதலை பெறக்கூடிய நம்பிக்கை முற்றிலும் கைவிடப்படும்போது

*(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)*

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**உண்மையான அஹ்மதி ஆகுவதற்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் சில நிபந்தனைகளை வைத்துள்ளார்கள். சில பொறுப்புகளைச் சுமத்தியுள்ளார்கள். சில கடமைகளின் பக்கம் கவனமூட்டியுள்ளார்கள். நீங்கள் அதன்படி செயலாற்றினால்தான் உண்மையான பொருளில் நீங்கள் எனது ஜமாஅத்தைச் சார்ந்தவர்களாக இருப்பீர்கள் என்று அன்னார் கூறியுள்ளார்கள்**

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: பிறருக்கு காட்டுவதற்காக அமல் செய்வதும், மறைமுகமான ஆசைகளில் மூழ்குவதும் ஷிர்க் ஆகும். ஒரு நபர் மார்க்கக் கட்டளைகளைப் புறக்கணித்து விட்டு உலக ஆசைகளை முழுமை செய்து கொள்கின்றார் என்றால் அவர் ஷிர்க் செய்கின்றார் என்றே பொருள்**

**கிலாஃபத்தின் அடிப்படை பணி என்னவென்றால், ஷிர்க்கை ஒழிப்பதும், ஏகத்துவத்தை நிலைநாட்டுவதும் ஆகும். மேலும் எந்த நோக்கத்திற்காக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தோன்றினார்களோ அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதே ஆகும். கிலாஃபத்தின் மீதான கண்ணியத்தை நிலைநாட்டுவது காலத்தின் கலீஃபாவின் பணியாகும். அது அவரது கடமையாகும். அதனை அவர் செய்வார். ஏனென்றால், அல்லாஹ்வின் வாக்குறுதிக்கேற்பவும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பின் மூலமாகவே ஏகத்துவத்தின் தூதுச் செய்தி உலகத்திற்குப் பரவ வேண்டியதுள்ளது. மேலும் உலகிலிருந்து கிலாஃபத்தின் மூலமாக ஷிர்க் ஒழிக்கப்பட உள்ளது**

**ஏகத்துவம் மற்றும் இறைவனை வணங்குவதற்கான வாதம் இருக்மென்றாலோ அல்லது உண்மையான முஸ்லிம் என்பதற்கான வாதம் இருக்குமென்றாலோ அந்நிலையில் அவர் பொய்யைத் தம்மிடமிருந்து வெளியேற்றி விட வேண்டும். மேலும் பொய்யர்களையும் வெளியேற்றி விட வேண்டும். சில மக்கள் சாதாரண விஷயங்களில் கூட தவறான கூற்றுகளைப் பேசுகின்றனர். அது ஒரு முஃமினுக்கு அழகல்ல. நமது செயல் நமது போதனைகளுக்கேற்ப இருக்குமென்றால் நமது தப்லீக்கின் விளைவாகக் கனிகளும் கிடைக்கும். நம்மீது மக்களிடத்தில் சிறந்த தாக்கமும் ஏற்படும்**

**திருக்குர்ஆன் வசனங்கள், நபிமொழி மற்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றுகளின் ஒளியில் பைஅத்தின் உண்மைத்துவம், காலத்தின் கலீஃபாவிற்குக் கண்ணியமளித்தல் மற்றும் கிலாஃபத்தோடு வலுவான தொடர்பை வைத்திருப்பதன் முக்கியத்துவம், ஏகத்துவத்தை நிலைநாட்டுவது, இறைவணக்கம் குறிப்பாக ஐவேளை தொழுகைகளை ஜமாஅத்தாக நிறைவேற்றுவது, இஸ்திஃபார், அடியார்களுக்குச் செலுத்த வேண்டிய உரிமைகள், பொருள் தியாகத்தின் தரம் மேலும் நல்ல விஷயங்களில் கட்டுப்பட்டு நடப்பேன் என்பதன் உண்மையான பொருளை விளக்கியவாறு ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய கருத்துக்களை எடுத்துக் கூறியவாறு ஷிர்க், பொய், விபச்சாரம், எல்லா விதமான அநீதிகள், ஆணவம், பெருமையடித்தல் ஆகியவற்றிலிருந்து தவிர்ந்திருக்குமாறும் ஹுஸூர் அவர்கள் கவனமூட்டினார்கள்**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **மேரிலேண்டில் (அமெரிக்கா) பைத்துர் ரஹ்மான் பள்ளிவாசலில் 02 நவமபர் 2018** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1397 -ஆம் ஆண்டு **நுபுவ்வத்** மாதம் **02 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ- الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ- اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ- صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

நான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொள்கின்றேன். மேலும் அன்னாரின் வாதங்களையும் ஏற்றுக் கொள்கின்றேன் என்ற அறிவிப்பு மட்டும் எந்தவோர் ஆண் அல்லது பெண் அஹ்மதியையும் உண்மையான அஹ்மதியாக ஆக்கி விடாது.

மாறாக, உண்மையான அஹ்மதி ஆகுவதற்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் சில நிபந்தனைகளை வைத்துள்ளார்கள். சில பொறுப்புகளைச் சுமத்தியுள்ளார்கள். சில கடமைகளின் பக்கம் கவனமூட்டியுள்ளார்கள். நீங்கள் அதன்படி செயலாற்றினால்தான் உண்மையான பொருளில் நீங்கள் எனது ஜமாஅத்தைச் சார்ந்தவர்களாக இருப்பீர்கள் என்று அன்னார் கூறியுள்ளார்கள்.

எனவே, **அஹ்மதி ஆகுவதற்கு வெறும் கொள்கை ரீதியிலான மாற்றங்கள் மட்டும் போதுமானதல்ல. இன்னும் கூறப்போனால், எனது பெற்றோர்கள் அஹ்மதிகளாக இருக்கின்றார்கள். எனவே நானும் அஹ்மதி ஆவேன் என்பதோ அல்லது நான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வாதங்களை உண்மையானதாக ஏற்றுக் கொண்டுள்ளேன். எனவே நான் அஹ்மதி ஆவேன் என்பதோ மட்டும் போதுமானதல்ல. இவை கொள்கை ரீதியில் ஒருவரை அஹ்மதியாக ஆக்குகின்றது.**

**ஆனால் செயல் ரீதியில் அஹ்மதி ஆகுவதற்குத் தனது அனைத்து ஆற்றல்கள் மற்றும் திறமைகள் மூலமாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஓர் அஹ்மதியிடம் வைத்த எதிர்பார்ப்பிற்கேற்பச் செயல்படுவது அவசியமாகும்.**

அன்னார் மிகத் தெளிவாகக் கூறியுள்ளார்கள்: நீங்கள் உங்களது தகுதிகளுக்கேற்ப இந்த விஷயங்களின்படி செயல்பட முயற்சி செய்யவில்லை என்றால் அந்நிலையில் உங்களது வாதம் வெற்று வாதமாகும். அது வெறும் வாயளவிலான கூற்றாகவே இருக்கும்.

அன்னார் கூறினார்கள்: பைஅத் என்பதன் பொருள் இறைவனிடம் உயிரை ஒப்படைத்து விடுதலாகும். அதன் பொருள் என்னவென்றால், நாங்கள் எங்களது உயிரை அல்லாஹ்விடத்தில் ஒப்படைத்து விட்டோம் என்பதாகும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 7 பக்கம் 29 – 1985 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

எனவே இது ஒன்றும் சாதாரண பணியல்ல. நாம் ஒரு பொருளை ஒருவருக்கு விற்று விட்டால் பின்னர் அந்த பொருளின் மீது நமக்கு எந்த உரிமையும் இருப்பதில்லை. இன்னும் கூறப்போனால், எவரிடத்தில் அந்த பொருளை நாம் விற்பனை செய்தோமோ அவரே அந்த பொருளுக்கு எஜமானர் ஆவார். மேலும் அந்நிலையில் அவர் தனது விருப்பத்திற்கேற்ப அந்தப் பொருளை அவர் பயன்படுத்துவார். எனவே நாம் இந்த நிலையை நம்மிடத்தில் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். நாம் நமது உயிர்கள் தொடர்பாக இந்தச் சிந்தனையை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

இந்தச் சிந்தனை மற்றும் நிலையை பெறுவதற்காக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்:

**பைஅத் செய்தவர் முதலில் பணிவையும் தன்னடக்கத்தையும் மேற்கொள்ள வேண்டும். மேலும் சுயநலம் மற்றும் மன இச்சைகளிலிருந்து வெளிவந்து விட வேண்டும்.**

சுயநலம் மற்றும் மன இச்சைகளிலிருந்து விலகி விட வேண்டும் என்ற ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய இந்தச் சொற்களைப் பாருங்கள்.

**சில மக்களின் சுயநலமும் மன இச்சைகளின் நிலையும் எப்படி உள்ளது என்றால் ஒரு பொறுப்பாளர், இன்னொரு பொறுப்பாளர் மீதுள்ள அதிருப்தியில் ஓரிடத்தில் நான் இருக்கின்ற நிலையிலும் பள்ளிவாசலுக்குத் தொழுகைக்காக வரவில்லை. அதற்கான காரணம் என்னவென்றால், அந்த பொறுப்பாளருடன் அவருடைய தொடர்புகள் சரியானதாக இல்லை. சுயநலம், மன இச்சைகள் எந்த அளவுக்கு அதிகரித்து விட்டன என்றால் கிலாஃபத்திடன் பைஅத் உடன்படிக்கைக்கான வாதம் செய்யப்படுகின்றது. ஆனால் எந்த வகையிலும் சிலர் அதனைப் பேணுவதில்லை.**

எனவே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

“பைஅத் செய்துள்ளீர்கள் என்றால் பின்னர் சுயநலம் மற்றும் மன இச்சைகளிலிருந்து விலகி விடுவது அவசியமாகும். அப்போதுதான் அவர் முன்னேற்றமடைவதற்குத் தகுதி படைத்தவர் ஆவார். ஆனால் பைஅத்துடன் எவர் மன இச்சைகளையும் கலந்திருப்பாரோ அவரால் ஒருபோதும் அருட்களைப் பெற முடியாது.”

(மல்ஃபூஸாத் தொகுதி 6 பக்கம் 173 – 1985 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

வாய் வாதங்கள் இருக்கின்றன. சந்திக்கும் போது மிக மரியாதையுடனும் சந்திப்பார்கள். ஆனால் தங்களுக்கிடையிலான பகைமையின் காரணமாக பள்ளிக்கு வருவதில்லை. காலத்தின் கலீஃபா அங்கிருக்கின்றாரே! அவருக்குப் பின்னால் நாம் தொழுவதற்குச் செல்ல வேண்டுமே! நாம் பொறுப்பாளர்களுக்காக பள்ளிக்குச் செல்வதில்லை என்பதையெல்லாம் அவர்கள் பொருட்படுத்த மாட்டார்கள். அவர்கள் பொறுப்பாளர்களாகவும் இருக்கின்றார்கள். இந்த நிலை இருக்குமென்றால் பின்னர் அஹ்மதி ஆக இருப்பதில் எந்தப் பயனும் இல்லை.

எனவே **உயிரை விற்பது என்பது என்னவென்றால், பணிவையும் தன்னடக்கத்தையும் தம்மிடம் ஏற்படுத்திக் கொள்வதாகும். நான் என்ற அகந்தையை ஒழிப்பதாகும்.** மேலும் சுயநலம் மற்றும் மன இச்சைகளிலிருந்து விலகி விட வேண்டும். மனிதனுக்குச் சொந்தமானது என்று எதுவுமில்லை. ஒவ்வொரு விஷயமும் இறைவனுடைய கட்டளைக்கேற்பவே கிடைத்தன என்ற இந்த நிலை ஏற்பட்டு விட்டால் பின்னர் இறைவன் அப்படிப்பட்ட உயிரை வீணாக்க மாட்டான். அல்லாஹ்விடத்தில் உயிரை ஒப்படைத்து விடுகின்றபோது அல்லாஹ்வும் அப்படிப்பட்ட உயிரைக் கருத்தில் கொள்கின்றான். மேலும் எல்லா வகையிலும் அதனைப் பாதுகாக்கின்றான்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

“பைஅத் செய்கின்ற நேரத்தில் உடன்படிக்கை ஒன்றாக இருக்கின்றது. பின்னர் செயல்களோ வேறொன்றாக இருக்கின்றன என்றால் இது எவ்வளவு பெரிய வித்தியாசம். எவ்வளவு பெரிய முரண்பாடு உங்களின் விவகாரங்களின் உள்ளன என்று பாருங்கள். நீங்கள் இறைவனிடத்தில் வித்தியாசத்தை காட்டினால் இறைவனும் உங்களிடத்தில் வித்தியாசங்களை காட்டுவான்.”

(மல்ஃபூஸாத் தொகுதி 4 பக்கம் 70,71 – 1985 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்:

“எனவே நீங்கள் எப்பொழுதும் உங்களது ஈமானையும் செயல்களையும் ஆய்வு செய்து கொண்டே இருங்கள். உங்களது உள்ளம் இறைவனுடைய இருப்பிடமாக ஆகுகின்ற அளவிற்கு உங்களிடத்தில் மாற்றமும், தூய்மையும் ஏற்பட்டு விட்டதா? என்று பாருங்கள். நீங்கள் இறைவனின் பாதுகாப்பின் நிழலின் கீழ் வந்து விடுங்கள்.”

(மல்ஃபூஸாத் தொகுதி 4 பக்கம் 70 – 1985 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

அன்னார் கூறினார்கள்: **“நான் பலமுறை எனது ஜமாஅத்திற்குக் கூறியுள்ளேன். நீங்கள் பைஅத் செய்து விட்டோம் என்ற வெறும் வாதத்தில் மட்டும் நம்பிக்கை கொண்டு விடாதீர்கள். அதனுடைய உண்மைத்துவம் வரை நீங்கள் சென்றடையாத வரை உங்களால் இரட்சிப்பைப் பெற முடியாது.”**

(மல்ஃபூஸாத் தொகுதி 4 பக்கம் 232,233 – 1985 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

அன்னார் கூறுகின்றார்கள்: “சஹாபாக்கள் தங்களிடத்தில் மாறுதல்களை ஏற்படுத்திக் கொண்டது போன்று நீங்களும் தூயவர்களாக ஆகி விடுங்கள் என்று நான் மீண்டும் மீண்டும் அறிவுரை செய்கின்றேன்.”

(மல்ஃபூஸாத் தொகுதி 4 பக்கம் 70 – 1985 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

**எனவே சஹாபாக்களைப் பாருங்கள். எவ்வளவு தூய மாற்றங்களை அவர்கள் தங்களிடத்தில் உருவாக்கிக் கொண்டனர். அவர்கள் தங்களுக்கிடையே இருந்த பல ஆண்டுகள் பகைமைகளை இன்னும் சொல்லப்போனால், தலைமுறை தலைமுறையான பகைமைகளை அல்லாஹ்விற்காக மட்டும் அன்பு, நேசம் மற்றும் சகோதரத்துவத்தில் மாற்றினார்கள்.**

**சில நிமிட பகைமையின் காரணமாக பள்ளிக்கு வருவதையே அவர்கள் நிறுத்தி விடவில்லை. தங்களது உயிர்களை விற்கின்ற போது அவர்கள் உலகின் பார்வையில் அறிவீனர்களாக இருந்தார்கள்.**

**ஆனால் அதன் பிறகு அறிவு படைத்த மக்கள் என்ற நிலையிலிருந்து இறைத்தொடர்பு கொண்ட மனிதர்களாக அவர்கள் மாறினர். இன்றிலிருந்து நம்முடையது என்று எதுவுமில்லை. அனைத்தும் இறைவனுடையதாகும் என்ற விஷயத்தை அவர்கள் உள்ளத்தாலும், உயிராலும் ஏற்றுக் கொண்டிருந்தனர். அவர்கள் ஷிர்க்கிலிருந்து தவ்பா செய்தபோது மறைவிலும் மறைவாக இருக்கக்கூடிய ஷிர்க்கிலிருந்தும் தப்பிப்பதற்கு அவர்கள் முயற்சி செய்தார்கள்.**

மறைவான ஷிர்க் என்பது பற்றி விளக்கமளித்தவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

**“சிலைகள் போன்றவற்றை வணங்குவது மட்டும் ஷிர்க்கல்ல. மாறாக, காரணிகளை வணங்குவதும் ஷிர்க் ஆகும். மேலும் உலகியல் பயன்களின் மீது அதிக அழுத்தம் கொடுப்பதும் ஷிர்க் ஆகும்.”**

(மல்ஃபூஸாத் தொகுதி 6 பக்கம் 18,19 – 1985 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

உலகியல் பயன்கள் என்பது என்னவென்றால், அதற்காக மனிதன் மார்க்கக் கட்டளையும், இறைவனது கட்டளைகளையும் முதுகுக்குப் பின்னால் வீசி விடுகின்றான்.

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: பிறருக்குக் காட்டுவதற்காக அமல் செய்வதும், மறைமுகமான ஆசைகளில் மூழ்குவதும் ஷிர்க் ஆகும்.**

(முஸ்தத்ரிக் ஹாகிம் தொகுதி 4 பக்கம் 366 கிதாபுர் ரிகாக் ஹதீஸ் எண் 7940 – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஒரு நபர் மார்க்கக் கட்டளைகளைப் புறக்கணித்து விட்டு உலக ஆசைகளைப் பூர்த்தி செய்து கொள்கின்றார் என்றால் அவர் ஷிர்க் செய்கின்றார் என்றே பொருள்.

சஹாபாக்கள் மத்தியில் எந்த அளவுக்கு இறையச்சம் இருந்தது என்றால் ஒரு சஹாபியைப் பற்றி வருகின்றது.

அவர் ஒருமுறை ஓரிடத்தில் அமர்ந்து அழுது கொண்டிருந்தார். மற்றொருவர், அவரது அழுகைக்கான காரணத்தைக் கேட்டார். அதற்கு அவர் கூறினார். எனக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்தக் கூற்று நினைவுக்கு வந்து விட்டது. அதாவது அன்னார் கூறினார்கள்: **நான் எனது சமுதாயம் தொடர்பாக ஷிர்க் மற்றும் மறைமுகமான ஆசைகள் என்ற விவகாரங்களில் அஞ்சுகின்றேன்.**

(முஸ்னது அஹ்மது பின் ஹம்பல் தொகுதி 5 பக்கம் 835, ஹஸ்னது ஷிதாத் பின் அவ்ஸ் ஹதீஸ் எண் 17250 – 1998 ஆம் ஆண்டு ஆலிமில் குதுபில் அச்சிடப்பட்டது)

இதுதான் சஹாபாக்களுக்கு அல்லாஹ்வின் மீதிருந்த அச்சம் மற்றும் ஷிர்க்கிலிருந்து தப்பிப்பதற்கு அவர்களுக்கு இருந்த கவலை பற்றிய அந்தஸ்தாகும். இன்னும் கூறப்போனால், அவர்களுக்கு இந்த விவகாரங்களில் மற்றவர்களைப் பற்றிய கவலையும் இருந்தது. மறைமுகமான ஷிர்க் செய்யக்கூடிய மக்கள் இந்த சமுதாயத்தில் தோன்றுவார்களே என்ற கவலையும் அவர்களுக்கு இருந்தது.

அந்த எண்ணம் தோன்றிய உடன் அவர்களின் உள்ளம் நடுநடுங்கி விட்டது. மேலும் கவலை ஏற்பட்டு அதனால் அழத் தொடங்கி விட்டார்கள். இந்த நிலையின் மூலமாக மட்டுமே மனிதன் உண்மையான பொருளில் ஏகத்துவ வாதியாகவும், ஏக இறைவனை வணங்கக் கூடியவனாகவும் ஆகின்றான். அல்லது ஆகவும் முடியும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

**தவ்ஹீது என்பது வெறும் வாயளவில் லா இலாஹ இல்லல்லாஹ் என்று கூறி உள்ளத்தில் ஆயிரக்கணக்கான சிலைகளை ஒன்று கூட்டிக் கொள்வதன் பெயரல்ல. இன்னும் கூறப்போனால், எந்த நபர் தனது ஒரு பணி, திட்டம் மற்றும் சூழ்ச்சிக்கு இறைவனுக்குரிய மகத்துவத்துவத்தை கொடுக்கின்றாரோ அல்லது இறைவன் மீது இருக்க வேண்டிய நம்பிக்கையை ஒரு மனிதன் மீது வைத்து விடுகின்றாரோ அல்லது இறைவனுக்கு அளிக்க வேண்டிய அளவிற்கான கண்ணியத்தை தனது நஃப்ஸிற்கு கொடுக்கின்றாரோ இந்த அனைத்து நிலைகளிலும் அந்த நபர் இறைவனின் பார்வையில் சிலை வணங்கி ஆவார்.**

அன்னார் கூறினார்கள்: **இறைவனுக்குரிய அந்தஸ்தின் நிலையில் ஒரு பொருளுக்கோ அல்லது ஒரு சொல்லிற்கோ அல்லது செயலிற்கோ மகத்துவம் வழங்கப்படும் என்றால் அது இறைவனது பார்வையில் சிலையாகும். நினைவில் கொள்ளுங்கள். இறைவன் நம்மிடம் எதிர்பார்க்கும் உண்மையான ஏகத்துவம் மற்றும் நமது இரட்சிப்பு எதனுடன் தொடர்புடையதாக இருக்கின்றதோ அது என்னவென்றால், சிலை அல்லது மனிதன் அல்லது சூரியன் அல்லது சந்திரன் அல்லது உயிர் அல்லது தனது திட்டம், சதி போன்ற அனைத்திலிருந்தும் இறைவனை இணையற்றவனாக கருத வேண்டும். இவ்விஷயங்களுக்கு எதிரில் இறைவனுக்கு எதனையும் எவரையும் ஆற்றல் படைத்தவனாகவோ, உணவு வழங்கக் கூடியவனாகவோ, கண்ணியம் வழங்கக் கூடியவானாகவோ, இழிவுபடுத்தக் கூடியவனாகவோ கருதக் கூடாது.**

(சிராஜுத்தீன் ஈஸாயி கே சார் சவாலோன் கா ஜவாப், ரூஹானீ கஸாயின் தொகுதி 12 பக்கம் 349,350)

அதாவது இன்ன நபர் எனக்குக் கண்ணியம் வழங்கக் கூடியவர் என்றும் அல்லது எனது இழிவு இன்ன நபருடன் தொடர்புடையது என்ற எண்ணமும் கொள்ளக் கூடாது. மாறாக, தனது அனைத்து விவகாரங்களிலும் முழுக்க முழுக்க இறைவன் மீது மட்டுமே சார்ந்திருக்க வேண்டும்.

எனவே இதுதான் இஸ்லாத்தின் அடிப்படை நிபந்தனையாகும். மேலும் உண்மை இஸ்லாமாகிய அஹ்மதிய்யத்தின் அடிப்படையாகும். மக்கள் கிலாஃபத்தை அல்லது காலத்தின் கலீஃபாவை ஷிர்க் என்ற நிலை ஏற்படுகின்ற அளவிற்கு அதிக அந்தஸ்து கொடுக்கின்றார்கள் என்று என்னிடத்தில் ஒருவர் கூறினார். இங்கு ஒன்று தெளிவாகி விட வேண்டும்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது அடிமைத்துவத்தில் உலகத்திலிருந்து ஷிர்க்கை ஒழிப்பதற்காக தோன்றினார்கள். எனவே அன்னாருடைய உண்மையான கிலாஃபத் என்பது எவ்வகையான ஷிர்க்கையும் அதிகரிக்கவோ, ஆதரிக்கவோ செய்யாது. அது எவ்வகையிலும் சாத்தியமற்ற ஒன்றாகும்.**

**கிலாஃபத்தின் அடிப்படை பணி என்னவென்றால், ஷிர்க்கை ஒழிப்பதும், ஏகத்துவத்தை நிலைநாட்டுவதும் ஆகும். மேலும் எந்த நோக்கத்திற்காக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தோன்றினார்களோ அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதே ஆகும்.**

காலத்தின் கலீஃபாவிற்கு மற்றொருவர் செலுத்துகின்ற மரியாதை மற்றும் கண்ணியத்தின் நடைமுறையினால் ஒருவர் இந்த

தாக்கத்தைப் பெற்றிருக்கின்றார் என்றால் அத்தகைய நபர் முதலில் ஒரு கருத்தை உருவாக்குவதற்கு முன்பாக அவர் சிந்திக்க வேண்டும். நான் தப்பெண்ணம் கொள்கின்றேனா? இல்லையா? என்று ஆய்வு செய்ய வேண்டும். அது தப்பெண்ணமாக இருக்குமென்றால், தப்பெண்ணம் கொள்பவர்கள் அதுபோன்ற தவறான எண்ணங்களிலிருந்து தவிர்ந்து கொள்ள வேண்டும்.

ஒருவரின் செயலால் காலத்தின் கலீஃபாவிற்கு நவூதுபில்லாஹ் இணை வைத்தல் என்ற அளவுக்கு அந்தஸ்து வழங்கப்படுகின்றது என்ற தீய தாக்கம் மக்களுக்கு ஏற்படும் என்றால் அவர் அதற்காக இஸ்திஃபார் செய்ய வேண்டும். மேலும் மிக எச்சரிக்கையாகவும் இருக்க வேண்டும்.

**நானும் இதனை ஒருபோதும் விரும்புவதுமில்லை. எனக்கு முந்தைய கலீஃபாக்களும் இதனை விரும்பியதில்லை. இன்ஷா அல்லாஹ் எதிர்காலத்தில் வரக்கூடிய கலீஃபாக்களும் தமது இருப்பிற்கு முக்கியத்துவம் வழங்குவதை விரும்ப மாட்டார்கள். ஆயினும், கிலாஃபத்தின் மீதான கண்ணியத்தை நிலைநாட்டுவது காலத்தின் கலீஃபாவின் பணியாகும். அது அவரது கடமையாகும். அதனை அவர் செய்வார். ஏனென்றால், அல்லாஹ்வின் வாக்குறுதிக்கேற்பவும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பின் மூலமாகவே ஏகத்துவத்தின் தூதுச் செய்தி உலகத்தில் பரவ வேண்டியதுள்ளது. மேலும் கிலாஃபத்தின் மூலமாக உலகிலிருந்து ஷிர்க் ஒழிக்கப்பட உள்ளது.**

எனவே சிலருடைய பக்குவமற்ற மூளைகளில் தர்பிய்யத் குறைபாட்டின் காரணமாக இதுபோன்ற எண்ணங்கள் உருவாகின்றன என்றால் அதனை அவர் தனது மூளையிலிருந்து வெளியேற்றி விட வேண்டும். ஏகத்துவத்தை நிலைநாட்டுவதற்கு முயற்சி செய்வது மேலும் தம்மை ஏற்றுக் கொண்டவர்களின் உள்ளங்களை ஷிர்க்கிலிருந்து தூய்மைப்படுவத்துவது போன்ற முக்கிய பணிகளுக்குப் பிறகு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நமக்குக் கவனமூட்டியுள்ள விஷயம் என்னவென்றால், பொய்யிலிருந்தும் தீய ஒழுக்கங்களிலிருந்தும் விலகுவதாகும். அதற்கான பைஅத்தையும் அன்னார் நம்மிடம் வாங்கியுள்ளார்கள். திருக்குர்ஆனில் அல்லாஹ் கூறுகின்றான்:

فَاجْتَنِبُوا الرِّجْسَ مِنَ الْأَوْثَانِ وَاجْتَنِبُوا قَوْلَ الزُّورِ அதாவது சிலைகளை வணங்குகின்ற அசுத்தத்திலிருந்தும், பொய் பேசுவதிலிருந்தும் விலகிக் கொள்ளுங்கள். (22:31)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இதற்கு விளக்கமளித்தவாறு கூறுகின்றார்கள்: திருக்குர்ஆன் பொய்யையும் ஒரு வகையான அசுத்தம் என்று கூறியுள்ளது. அசுத்தமான, தூய்மையற்ற விஷயமாக அதனைக் கூறுகின்றது.

அன்னார் கூறுகின்றார்கள்: **பாருங்கள்! இந்த வசனத்தில் இறைவன் பொய்யை சிலைக்கு நிகராகக் கூறியுள்ளான். எனவே உண்மையில் பொய்யும் ஒருவகையான ஷிர்க்கே ஆகும். இல்லையென்றால், மனிதன் ஏன் உண்மையைக் கைவிட்டு விட்டு பொய்யின் பக்கம் செல்கின்றான். எவ்வாறு சிலைக்குப் பின்னால் எந்த உண்மைத்துவமும் இருப்பதில்லையோ அதே போன்று பொய்யிற்குப் பின்னாலும் எந்த உண்மைத்துவமும் இருப்பதில்லை.**

(மல்ஃபூஸாத் தொகுதி 3 பக்கம் 350 – 1985 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

பொய்யின் பின்னணியில் ஒரு செயற்கைத்தன்மை மட்டுமே இருக்கின்றது. ஒரு வெளிப்படையான சொல்லை இனிப்பான பலகாரத்தைப் போன்று மனிதன் முன் வைக்கின்றான். அல்லது ஒரு எழுத்து உள்ளது என்றால் அதனை முன் வைக்கின்றான். இவ்வாறு ஒரு போலியான ஒன்றை மனிதன் அழகுபடுத்திக் காட்டுகின்றான். ஆனால் அதனுள் ஒன்றும் இருப்பதில்லை.

அடுத்து அன்னார் கூறுகின்றார்கள்: **பொய்யும் ஒரு சிலையாகும். அதன் மீது நம்பிக்கை வைத்து மனிதன் இறைவன் மீதான நம்பிக்கையைக் கைவிட்டு விடுகின்றான். எனவே பொய் பேசுவதனால் இறைவனும் கைநழுவி விடுகின்றான்.**

(இஸ்லாமி உஸூல் கி ஃபிலாஸஃபி, ரூஹானி கஸாயின் தொகுதி 10 பக்கம் 361)

**எனவே ஏகத்துவம் மற்றும் இறைவனை வணங்குவதற்கான வாதம் இருக்குமென்றாலோ அல்லது உண்மையான முஸ்லிம் என்பதற்கான வாதம் இருக்குமென்றாலோ அந்நிலையில் அவர் பொய்யைத் தம்மிடமிருந்து வெளியேற்றி விட வேண்டும். மேலும் பொய்யர்களையும் வெளியேற்றி விட வேண்டும். சில மக்கள் சாதாரண விஷயங்களில் கூட தவறான கூற்றுகளைப் பேசுகின்றனர். அது ஒரு முஃமினுக்கு அழகல்ல.**

சின்னச்சின்ன தவறான கூற்றுகள் பொய் ஆகாது என்று கருதக் கூடாது. தவறான கூற்றுகள் பொய்யே ஆகும். பொய் மனிதனை ஏகத்துவத்திலிருந்து விலக்கிக் கொண்டு சென்று விடும். **மக்களுக்கிடையே ஏராளமான உள் விவகாரங்கள் உள்ளன. சண்டை, சச்சரவுகள் போன்றவற்றில் மனிதன் பொய்யைப் பயன்படுத்தித் தமக்குச் சாதகமாகத் தீர்ப்பை பெற்றுக் கொள்கின்றான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எந்த அளவுக்கு நுட்பமாகப் பொய்யைக் குறித்து எச்சரிக்கை செய்துள்ளார்கள் என்பதனை மனிதன் கவனமாகச் சிந்தித்தால் மெய்சிலிர்த்து விடும்.**

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எவர் ஒருவர் சிறு குழந்தையிடம் வா! நான் உனக்கு ஒன்றைத் தருகின்றேன் என்று கூறி அக்குழந்தைகக்கு அவர் எதனையும் கொடுக்கவில்லை என்றால் அதுவும் கூட பொய்யிலேயே அடங்கும்.**

(சுனன் அபீ தாவூது, கிதாபுல் அதப்.... ஹதீஸ் எண் 4991)

ஆக, நகைச்சுவையாக பேசப்படுகின்ற பொய்யும் பொய்யே ஆகும்.

அடுத்து அன்னார் கூறினார்கள்: பொய் என்பது பாவத்தின் பக்கமும் தீமையின் பக்கமும் மனிதனை அழைத்துச் செல்கின்றது. தீமை மனிதனை நரகத்தின் பக்கம் கொண்டு செல்கின்றது.

தீமை என்பதன் பொருள் என்னவென்றால், உண்மையிலிருந்து வெகு தூரம் அகன்று செல்லக்கூடியவர் மற்றும் மிகவும் அதிகமான பாவங்களைச் செய்யக் கூடியவர் என்பதாகும்.

நாம் உண்மையின் உயர் தரத்தில் எந்த அளவுக்கு நிலைநிற்கின்றோம் என்பதையும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மனிதனை உண்மை என்பது சொர்க்கத்தின் பக்கம் அழைத்துச் செல்கின்றது என்று கூறிய தரத்திற்கேற்ப நாம் அதில் நிலைநிற்கின்றோமா? என்றும் நாம் நம்மை நாமே எப்போதும் ஆய்வு செய்து கொண்டிருக்க வேண்டும்.

(சுனன் அபீ தாவூது, கிதாபுல் அதப்... ஹதீஸ் எண் 4989)

அடுத்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் குறிப்பாக எடுத்துரைத்துள்ள ஒரு தீமை உள்ளது. தம்மை ஏற்றுக் கொண்டவர்கள் அதிலிருந்து குறிப்பாக விலகி இருக்க வேண்டும் என்று அன்னார் அறிவுரை செய்துள்ளார்கள். இன்னும் கூறப்போனால், பைஅத் நிபந்தனைகளிலும் அது இடம் பெற்றுள்ளது. **அது விபச்சாரத்திலிந்து தவிர்ந்து கொள்ளுதல் என்பதாகும்.**

(இஸாலா அவ்ஹாம், ரூஹானி கஸாயின் தொகுதி 3 பக்கம் 563)

இங்கு விபச்சாரம் என்பது தவறான உடல் உறவு மூலமாக நிகழும் வெளிப்படையான விபச்சாரம் என்பது மட்டுமல்ல. மாறாக, அன்னார் கூறினார்கள்: وَلَا تَقْرَبُوا الزِّنٰى என்று அல்லாஹ் கூறியுள்ளான். அதாவது விபச்சாரத்தின் பக்கமே நெருங்காதீர்கள் என்று அல்லாஹ் கூறுகின்றான். அதாவது விபச்சாரத்திற்கான சந்தர்ப்பங்களிலிருந்தும், விபச்சாரம் தொடர்பான எண்ணங்கள் உள்ளங்களில் உருவாகின்ற சந்தர்ப்பங்களிலிருந்தும் விலகி நிற்க வேண்டும். செயல் ரீதியாக விபச்சாரம் செய்வதிலிருந்து விலகி நிற்பது மட்டுமல்ல. மாறாக, அது போன்ற எண்ணங்கள் உள்ளங்களில் உருவாகின்ற வழிகளிலிருந்தும் தவிர்ந்து கொள்ள வேண்டும். எந்த வழிகளினால் பாவங்களுக்கான வாய்ப்பு உள்ளதோ அதிலிருந்து விலகிக் கொள்ள வேண்டும்.

(இஸ்லாமி உஸூல் கி ஃபிலாஸஃபி, ரூஹானி கஸாயின் தொகுதி 10 பக்கம் 342)

மனிதனை எந்த எந்த வழிமுறைகளெல்லாம் விபச்சாரத்தின் பக்கம் கொண்டு செல்லக்கூடிய அபாயம் உள்ளதோ அதிலிருந்து தவிர்ந்து கொள்ள வேண்டும். இன்றைய காலத்தில் T.V, Internet உள்ளது. அதில் தவறான திரைப்படங்கள் காட்டப்படுகின்றன. அதில் வெளிப்படையாகவே விபச்சாரம் தூண்டப்படுகின்றது.

எனவே இது போன்ற விஷயங்களிலிருந்து தப்பிப்பது ஒவ்வோர் அஹ்மதியின் பணியாகும். பல குடும்பங்களில் இதன் காரணமாக சண்டை சச்சரவுகள் உள்ளன. பல குடும்பங்கள் இதனால் பிரிந்து விட்டன. கணவர் வீட்டில் அமர்ந்து தவறான திரைப்படங்கள் பார்த்துக் கொண்டிருக்கின்றார். அல்லது Internet ல் அமர்ந்திருக்கின்றார். இதன் மூலமாக தவறான எண்ணங்கள் தோன்றுகின்றன. அதனால் பல குடும்பங்களில் சண்டைகளும், சச்சரவுகளும் ஏற்படுகின்றன. மேலும் குடும்பங்கள் உடைந்து விடுகின்றன. அல்லது பல குடும்பங்கள் உடைந்து விட்டன என்றும் கூறலாம்.

பல இளைஞர்கள் இதன் காரணமாக சீரழிந்து வருகின்றார்கள். தீய நட்பின் தாக்கங்கள் ஏற்படுகின்றன. ஏனென்றால் நிர்வாணமான மற்றும் தவறான திரைப்படங்களை பார்க்கும் பழக்கம் அவர்களுக்கு இருக்கின்றது. இந்த பெயர்தாங்கிய முன்னேற்றம் அடைந்த சமூகம் இதனை தனி நபர் சுதந்திரம் மற்றும் நாகரீகம் என்று கருதுகின்றது.

ஆனால் நாம் நம்மை இந்த தீமைகளிலிருந்து பாதுகாக்க வேண்டும். இவர்கள் தற்போது இதனால் பாதிப்புகள் இருக்கின்றன என்று கூறுகின்றனர். நீங்களே Pornography சினிமா தொடர்பாக தகவல்களைப் பெற்றால் அது விபச்சாரத்தின் பக்கம் அழைத்துச் செல்லும் என்ற தகவல் உங்களுக்கு கிடைக்கும். அது குடும்ப தீவிரவாதத்தின் பக்கம் கொண்டு செல்கின்றது என்பதும் தவறான தொடர்புகள் அதனால் உருவாகின்றன என்பதும், குழந்தைகள் மீதான வன்புணர்வு சம்பவங்கள் அதனால் நிகழ்கின்றன என்பதும் தெரிய வரும். இந்த அனைத்து சம்பவங்களும் அசுத்தமான இந்த சினிமாக்களின் மூலமாகத்தான் நிகழ்கின்றன என்பது தெரிய வரும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்: அதற்கான எண்ண கூட வரக்கூடாது.

அதாவது தவறாக எண்ணம் வந்தால் கூட அதிலிருந்து விலகி விட வேண்டும். தற்போது இந்த விஷயங்களைப் பார்ப்பதால் இந்த அனைத்து தவறான சம்பவங்களும் நடக்கின்றன என்பது உறுதியாகி விட்டது. எனவே குறிப்பாக ஓர் அஹ்மதி இவ்விஷயங்களிலிருந்து விலகியிருக்க வேண்டும்.

அடுத்து ஓர் உண்மையான அஹ்மதியாக ஆகுவதற்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எல்லா வகையான அநீதிகளிலிருந்தும் விலகியிருப்பதன் பக்கம் குறிப்பாக கவனமூட்டியுள்ளார்கள்.

அன்னார் கூறினார்கள்: **நீங்கள் என்னைச் சார்ந்தவர்களாக இருக்க விரும்பினால் பின்னர் எவ்வகையிலும் தீங்கிழைத்தல், அநீதி இழைத்தல் மற்றும் கூச்சல் குழப்பம் விளைவித்தல் ஆகியவற்றிற்கான எவ்வகையான எண்ணமும் உங்களது உள்ளங்களில் வரக்கூடாது.**

(மஜ்மூஆ இஷ்திஹாராத் தொகுதி 3 பக்கம் 46,47)

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் மாபெரும் அநீதி எது எனக் கேட்கப்பட்டது? அதற்கு, ஒரு நபர் தனது சகோதரருக்கு உரிமையான நிலத்தின் ஓர் அடியை அபகரித்து தனக்கு சொந்தமாக்கிக் கொள்வது என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.**

(முஸ்னது அஹ்மது பின் ஹம்பல் தொகுதி 2 பக்கம் 59,60, முஸ்னது அப்துல்லாஹ் பின் மஸ்வூது ஹதீஸ் எண் 3767)

**அதற்கு பகரமாக மனிதனுக்கு பெரும் தண்டனை தரப்படும். அதனை மனிதனால் சிந்தித்துக் கூட பார்க்க முடியாது. எனவே ஒருவரின் உரிமையை அபகரிப்பது மாபெரும் அநீதி மற்றும் பாவமாகும்.**

அந்நியர்களுக்கு நாம் இஸ்லாத்தின் சிறப்புகளை எடுத்துக் கூறுகின்றோம். அடியார்களுக்குரிய உரிமைகளை வழங்குவது தொடர்பாக இஸ்லாம் உயர்தரமான போதனைகளை கூறுகிறது என்றும் உரிமைகளைப் பெறுவதற்கு பகரமாக உரிமைகளை கொடுப்பதன் பக்கம் நமக்கு இஸ்லாம் கவனமூட்டுகின்றது என்றும் கூறுகின்றோம். மக்களுக்கு நாம் மிகவும் அதிகமாக இதனை போதிக்கின்றோம். ஆனால் நமது செயல்கள் இதற்கு மாற்றமாக இருக்குமென்றால் நாம் பாவம் செய்பவர்களாவோம். மேலும் பொய் பேசக் கூடியவர்களாகவும் இருப்போம்.

எனவே இதனையும் ஒவ்வோர் அஹ்மதியும் மிக ஆழமாக ஆய்வு செய்ய வேண்டும். நமது செயல்கள் நமது போதனைக்கேற்ப இருக்க வேண்டும். அவ்வாறு இருந்தால் நமது தப்லீக்கும் கனிகளை தரக்கூடியதாக இருக்கும். நம்மைப் பற்றிய நல்ல தாக்கமும் மக்களுக்கு ஏற்படும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் என்ன தரத்தை நிர்ணயித்துள்ளார்கள் என்றால் அது ஏற்கனவே கூறப்பட்டது போன்று அநீதி இழைப்பது என்பதல்ல. மாறாக, அநீதி இழைப்பதற்கான எண்ணம் கூட உள்ளத்தில் தோன்றக்கூடாது. எவர் மீதும் எவ்வகையான அநீதி இழைத்தலும் கூடாது.

அடுத்து ஹுஸூர் கூறினார்கள்: அல்லாஹ் இறை வணக்கம் செய்வதை ஒரு நம்பிக்கையாளருக்கு முக்கிய நிபந்தனையாக வைத்துள்ளான். இன்னும் கூறப்போனால், மனித படைப்பின் நோக்கம் இறை வணக்கம் என்றே கூறியுள்ளான்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

**எனது ஜமாஅத்தைச் சார்ந்தவர்களாக தங்களை கருதில் கொள்ளும் மக்களே! நீங்கள் உண்மையிலேயே இறையச்சத்தின் வழிகளில் காலெடுத்து வைக்கும்போதுதான் வானத்தில் எனது ஜமாஅத்தைச் சேர்ந்தவராக கருதப்படுவீர்கள். எனவே நீங்கள் உங்களது ஐவேளை தொழுகைகளை இறைவனை பார்ப்பது போன்று பய பக்தியுடன் தொழுது வாருங்கள்.**

(கிஷ்தி நூஹ், ரூஹானி கஸாயின் தொகுதி 19 பக்கம் 15)

மேலும் அன்னார் கூறினார்கள்: தொழுகை ஒவ்வோர் முஸ்லிமின் மீதும் கடமையாகும். ஹதீஸில் வந்துள்ளது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் வந்து ஒரு சமுதாயம் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டது. மேலும் அவர்களில் சிலர் கூறினர். அல்லாஹ்வின் தூதர்

(ஸல்) அவர்களே! எங்களுக்குத் தொழுகைகளை மன்னித்து விடுங்கள். ஏனென்றால் நாங்கள் வியாபாரிகளாக இருக்கின்றோம். ஐந்து நேரத் தொழுகைகளைத் தொழுவது மிகக்கடினமான பணிகளாகும். எங்களுடன் கால்நடைகளும் இருக்கின்றன. அவற்றை நாங்கள் மேய்க்கின்றோம். உழைக்கின்றோம். எங்களது ஆடைகள் அசுத்தமானவையாக ஆகிவிடுகின்றன. எங்களுக்கு ஓய்வும் கிடைப்பதில்லை என்றும் கூறினர். எனவே எங்களது தொடர் வேலைப்பளுவின் காரணமாக தொழாமல் இருப்பதற்கு எங்களுக்கு அனுமதி தாருங்கள் என்று கேட்டார்கள்.

அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு பதிலளித்தார்கள்: **பாருங்கள்! தொழுகை இல்லையென்றால் வேறு என்ன தான் உள்ளது? எந்த மார்க்கத்தில் தொழுகை இல்லையோ அது மார்க்கமேயில்லை.**

அன்னார் கூறினார்கள்: **தொழுகை என்பது என்ன? தொழுகை என்பது என்வென்றால், தனது இயலாமை மற்றும் பலவீனங்களை இறைவன் முன் எடுத்து வைப்பதும், தனது தேவைகளை அவனிடத்திலேயே வேண்டுவது ஆகும். மேலும் இறை அன்பு, அவன் மீதான அச்சம் மற்றும் அவனது நினைவில் உள்ளத்தை நிறுத்தி வைப்பதன் பெயரே தொழுகையாகும். மேலும் அதுவே மார்க்கமாகும். எவர் தொழுகையிலிருந்து விடுபட விரும்புகின்றாரோ அவர் விலங்குகளை விட மோசமானவர் ஆவார். அவரது நிலை விலங்குகளுக்கு ஒப்பானதாகும். விலங்குகளைப் போன்றே அவரும் உண்ணுகின்றார். பருகுகின்றார். மேலும் விலங்குகளைப் போன்றே உறங்குகின்றார். இது ஒருபோதும் மார்க்கமாகாது. மாறாக, இது நிராகரிப்பாளர்களின் வாழ்க்கையாகும்.**

(மல்ஃபூஸாத் தொகுதி 5 பக்கம் 253,254 – 1985 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

எனவே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தெளிவாகக் கூறியுள்ளார்கள். **விலங்குகளுக்கும் மனிதனுக்கும் வித்தியாசத்தை ஏற்படுத்துகின்ற விஷயம் என்பது இறை வணக்கம் மற்றும் தொழுகை ஆகும். நாம் தொழுவதன் பக்கம் கவனம் செலுத்தவில்லை என்றால் நாம் எந்த வட்டத்தில் வருகின்றோம் என்பதை நாமே கணித்துக் கொள்ள முடியும்.**

**நான் பலமுறை இதன் பக்கம் கவனமூட்டி விட்டேன். தொழுகைக்கான சென்டர்கள் மற்றும் பள்ளிவாசல்கள் தொலைவில் இருந்தால் அருகிலுள்ள குடும்பங்கள் தங்களுக்குள் ஒன்றிணைந்து ஓர் இடத்தை நிர்ணயித்து அங்கு தொழுது வர வேண்டும். இதன் மூலம் ஜமாஅத்தாகத் தொழுகின்ற நற்கூலியும் கிடைக்கும். மேலும் அதே நேரத்தில் தொழுகையைப் பற்றிய கவனமும் இருக்கும். மேலும் அடுத்த தலைமுறைக்கும் சீர்திருத்தம் ஏற்பட்டுக் கொண்டிருக்கும். மேலும் அவர்களுக்கும் தொழுகையின் பக்கம் கவனம் ஏற்படும்.**

நாம் பள்ளிவாசல்களைக் கட்டுவதன் பக்கம் கவனம் செலுத்தி வருகின்றோம். பள்ளிவாசல்களைக் கட்டவும் செய்கின்றோம். நாளை நான் வெர்ஜீனியா நகரத்தில் இன்ஷா அல்லாஹ் பள்ளிவாசலை திறந்து வைக்கின்றேன். ஆனால் நமக்கு இறை வணக்கங்களின் பக்கம் கவனம் இல்லையென்றால் இந்த பள்ளிவாசலைக் கட்டுவதில் என்ன பயன் உள்ளது? நான் மீண்டும் மீண்டும் கூறுகின்றேன்.

**பொறுப்பாளர்கள் அவர்கள் கிளை அமைப்பின் பொறுப்பாளராக இருந்தாலும் சரி; அல்லது ஜமாஅத் அளவிலான பொறுப்பாளராக இருந்தாலும் சரி; அவர்கள் இதன் பக்கம் முழு கவனம் செலுத்தட்டும். தொழுகைகளின் பக்கம் கவனம் செலுத்துவது அவசியமாகும். அவ்வாறு செய்தால் தொழுகைக்கு வருபவர்களின் எண்ணிக்கை பல மடங்கு அதிகமாகும். மேலும் அதன் மூலம் அடுத்த தலைமுறையும் தர்பிய்யத் பெற்று விடும்.**

தொழுகையின் முக்கியத்துவம் தொடர்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஒரு வழிகாட்டல் உள்ளது. அது நமது உள்ளத்தை அசைத்து விடுகின்றது.அன்னார் கூறுகின்றார்கள்:

**கியாமத் நாளன்று தொழுகை பற்றியே அடியார்களிடம் கேள்வி கணக்குக் கேட்கப்படும். இந்த கணக்குச் சரியானதாக இருந்தால் அவர் வெற்றி பெற்று விடுவார். மேலும் இரட்சிப்பைப் பெற்றவர் ஆவார். ஒருவேளை இது தவறாக இருந்தால் அவர் தோற்று விடுவார். மேலும் நஷ்டத்தில் இருப்பார்.**

(சுனன் நிஸாயி, கிதாபுஸ் ஸலாத், பாபுல் மஹாஸிபா அலஸ் ஸலாத் ஹதீஸ் எண் 466)

எனவே இது சாதாரண விவகாரம் அல்ல. தொழுகையில் என்ன கவனம் இருக்க வேண்டுமோ அதற்குரிய உரிமையைச் செலுத்துவதும் சாதாரண காரியமல்ல. அல்லாஹ் ஒவ்வோர் அஹ்மதிக்கும் அதற்கான உரிமையை செலுத்துகின்ற நற்பாக்கியத்தை வழங்குவானாக.

உரிமை என்பது வெறும் கடமையான தொழுகைகளை நிறைவேற்றுவதனால் முழுமையடைந்து விடாது. மாறாக, தஹஜ்ஜுத் தொழுகையின் பக்கமும் நஃபிலான தொழுகைகளின் பக்கமும் கவனம் செலுத்த வேண்டும் என்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியுள்ளார்கள்.

(மல்ஃபூஸாத் தொகுதி 3 பக்கம் 245 – 1985 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

**மேலும் உங்களது கடமையான தொழுகைகளில் ஏதேனும் குறைபாடு இருக்குமென்றால், இறைவன் அதனை நஃபில்களைக் கொண்டு முழுமை செய்து விடுகின்றான் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் கூறியுள்ளார்கள்.**

(சுனன் நிஸாயி, கிதாபுஸ் ஸலாத், பாபுல் முஹாஸிபா அலஸ் ஸலாத் ஹதீஸ் எண் 466)

எனவே நஃபில் தொழுவதற்கான பழக்கம் இருந்தால் அந்த குறைகள் நிவர்த்தி செய்யப்படும். எனவே நஃபிலான தொழுகைகள் மற்றும் தஹஜ்ஜுத் தொழுகைகளை மேற்கொள்வது மிக முக்கிய விஷயமாகும். இதன் பக்கம் கவனம் இருக்க வேண்டும்.

**அடுத்து மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த மேலும் அதன் பக்கம் எப்போதும் ஒவ்வோர் அஹ்மதிக்கும் கவனம் இருக்க வேண்டிய விஷயம் என்னவென்றால், அல்லாஹ்விடத்தில் தனது பாவத்திற்காக பாவ மன்னிப்பு கோருவது ஆகும்.** அதன் பக்கம் நிரந்தர கவனம் இருக்க வேண்டும். மனிதன் பலவீனமானவன் ஆவான். சில முறை தவறுகளிலிருந்து தப்பிப்பதற்கு முயற்சிகள் செய்யப்பட்ட போதிலும் தவறுகள் ஏற்பட்டு விடுகின்றன. அல்லாஹ் என்பவன் தனது அடியார்களின் தவறுகளை மட்டும் பிடிப்பவனோ அல்லது தண்டனை அளிப்பவனோ அல்லது அதன் மீது மட்டுமே பார்வை வைத்திருப்பவன் அல்லன்.

மாறாக, அல்லாஹ் அந்த தவறுகளை மன்னிக்கின்றான். மேலும் எதிர்காலத்தில் அந்த தவறுகளிலிருந்து தப்பிப்பதற்குமுரிய வழிகளை நமக்குக் கற்றுத் தந்துள்ளான். அது என்னவென்றால், இஸ்திஃபார் செய்வதாகும்.

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: மக்கள் பாவமன்னிப்பு கோருகின்ற நிலையில் அல்லாஹ் மக்களுக்குத் தண்டனை வழங்க மாட்டான். (8:34)**

சில மக்களே பாவமன்னிப்பு வேண்டிக் கொண்டிருக்கின்றார்கள் என்றால் அவர்கள் மூலமாக ஏராளமானவர்களின் தண்டனையை அல்லாஹ் மன்னித்து விடுகின்றான். அத்தகைய மக்களின் மூலமாக மற்றவர்களும் தப்பித்து விடுகின்றனர்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

சில மக்கள் இருக்கின்றார்கள். அவர்களுக்குப் பாவத்தைப் பற்றிய செய்தி இருப்பதில்லை. பாவமன்னிப்புக் கோருவதற்கான எந்த ஏற்பாட்டையும் அவர்கள் செய்வதில்லை. மனிதன் தனது ஒவ்வோர் பாவத்திற்கும் அது வெளிப்படையானதாக இருந்தாலும் சரி; மறைவானதாக இருந்தாலும் சரி; மனிதன் அதை அறிந்திருந்தாலும் சரி அல்லது அறியாமல் இருந்தாலும் சரி; கை, கால், நாவு, காது மற்றும் கண் ஆகியவற்றின் மூலம் வெளிப்பட்ட அனைத்து வகையான பாவங்களுக்கும் பாவமன்னிப்பு வேண்டி வர வேண்டும்.

அதாவது மனிதனுடைய பல்வேறு தரப்பட்ட உடல் உறுப்புகள் பாவங்களுக்குக் காரணிகளாக ஆகிவிடுகின்றன. ஆகவே ஒவ்வோர் உறுப்பும் பாவத்திலிந்து தப்பிப்பதற்காக நீங்கள் பாவமன்னிப்பு கோரி வர வேண்டும்.

எனவே அன்னார் கூறினார்கள்: உடல் உறுப்புகள் பாவம் செய்வதற்குக் காரணிகளாக இருக்கின்றன.

எனவே அல்லாஹ்வின் பாதுகாப்பில் இருப்பதற்கு எப்போதும் முயற்சி செய்து வர வேண்டும். எனவேதான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

திருக்குர்ஆனின் இந்த துஆவை எப்போதும் செய்து வர வேண்டும். அந்த துஆ என்னவென்றால்,

رَبَّنَا ظَلَمْنَآ اَنْفُسَنَا وَاِنْ لَّمْ تَغْفِرْ لَنَا وَتَرْحَمْنَا لَنَكُوْنَنَّ مِنَ الْخٰسِرِيْنَ

அதாவது எங்கள் இறைவா! நாங்கள் எங்களுக்கே அநீதி இழைத்துக் கொண்டோம். நீ எங்களை மன்னித்து எங்களுக்குக் கருணை காட்டாவிடில் நாங்கள் நஷ்டமடைந்தவர்களைச் சார்ந்தவர்களாகி விடுவோம். (7:24)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

''இறைவனிடத்தில் ஆற்றலை வேண்டும்போது அதாவது இஸ்திஃபார் செய்யும் போது இறைவன் பரிசுத்த ஆவியின் மூலமாக அவர்களின் பலவீனங்களை அகற்றுகின்றான்.''

(கிஷ்தி நூஹ், ரூஹானி கஸாயின் தொகுதி 19 பக்கம் 34)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தம்மை ஏற்றுக் கொண்டவர்களுக்கு இவ்விஷயத்தையும் அடிப்படை நிபந்தனையாக வைத்துள்ளார்கள். அது என்னவென்றால் அவர்கள் படைப்பினங்களுக்குரிய உரிமைகளைச் சரியாக ஆற்ற வேண்டும். அல்லாஹ்வின் படைப்பினங்களில் எவருக்கும் எவ்வகையான துன்பமும் கொடுப்பதிலிருந்து தவிர்ந்திருக்க வேண்டும்.

(இஸாலா அவ்ஹாம் தொகுதி 3 பக்கம் 564)

அன்னார் நாம் எப்போதும் நமது உள்ளத்தை ஆராய்ந்து கொண்டிருப்பதன் பக்கம் கவனமூட்டியுள்ளார்கள்.

அன்னார் கூறினார்கள்: உங்களிடத்தில் அல்லாஹ்வின் மீதான அச்சம் இருக்க வேண்டும். மேலும் அதன் விளைவாக படைப்பினத்தின் மீது அனுதாபமும் அவர்களுக்கு நன்மையை விரும்பக்கூடியர்வகளாகவும் நீங்கள் திகழ வேண்டும்.

**ஒரு ஹதீஸில் வருகின்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

**நீங்கள் உங்களுக்குள் பொறாமை கொள்ளாதீர்கள். ஒருவருக்கொருவர் சண்டையிடாதீர்கள். ஒருவர் மற்றவருக்கு எதிராகப் பகைமை கொள்ளாதீர்கள். ஒருவர் மற்றவரை எதிரிகளாக்கிக் கொள்ளாதீர்கள். ஒருவர் மற்றவருக்குப் போட்டியாக வியாபாரம் செய்யாதீர்கள். உங்களுக்கிடையில் ஒருவருக்கொருவர் சகோதரர்களாக ஆகி விடுங்கள். அடுத்து ஒரு முஸ்லிம் தனது மற்றொரு முஸ்லிம் சகோதரர் மீது அநீதி இழைக்க மாட்டார். அவர் அவரை இழிவிற்குள்ளாக்க மாட்டார். ஏளனமும் செய்ய மாட்டார். தனது சகோதரரை ஏளனமாகப் பார்ப்பது ஒன்றே ஒரு நபரின் தீங்கிற்குப் போதுமானதாகும். ஒரு முஸ்லிமின் இரத்தம், செல்வம் மற்றும் கண்ணியம் மற்ற முஸ்லிமிற்கு ஹராமாகும்.**

(சஹீஹ் முஸ்லிம்.... ஹதீஸ் எண் 6541)

இது எப்படிப்பட்ட விஷயம் என்றால் இது இன்று எல்லோரையும் விட அதிகமாக அஹ்மதிகளாகிய நம்மிடமிருந்து வெளிப்பட வேண்டும். அல்லாஹ்வின் அருளால் இதில் முடிந்த அளவு முன்னேற்றம் ஏற்படுகின்றது. முஸ்லிம்கள் இந்த உண்மையை இன்று புரிந்து கொண்டால் அதன்படி செயல்படுபவர்களாக இருந்தால் முஸ்லிம் அரசாங்கங்கள் அதன்படி செயல்பட்டால் நன்றாக இருக்கும்.

இன்று முஸ்லிம்கள் முஸ்லிம்கள் மீதே அநீதி இழைத்து அவர்களின் உயிரையும், உடைமையையும் அழித்து விடுகின்றனர். ஆயிரக்கணக்கான மற்றும் லட்சக்கணக்கான பிள்ளைகள் அநாதைகளாகி வருகின்றனர். லட்சக்கணக்கான பெண்கள் விதவைகளாகி வருகின்றனர்.

அடுத்து **தற்பெருமை என்பது ஒரு மாபெரும் தீமையாகும்.** அதிலிருந்து விலகி இருப்பதற்குத் திருக்குர்ஆன் நமக்கு அறிவுரை செய்கின்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் இதன் பக்கம் கவனமூட்டியுள்ளார்கள். அன்னார் கூறினார்கள்: **எவரது உள்ளத்தில் கடுகளவு ஆணவம் இருக்குமோ அவர் ஒருபோதும் சொர்க்கத்தில் நுழைய முடியாது.**

(சஹீஹ் முஸ்லிம், கிதாபுல் ஈமான், பாப் தஹ்ரீமுல் கிப்ர்... ஹதீஸ் எண் 267)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

**மனிதன் எவ்வகையிலும் ஆணவமும், அகந்தையும் கொள்ளக் கூடாது. அறிவார்ந்த ரீதியிலும் சரி; குடும்ப ரீதியிலும் சரி.**

(மல்ஃபூஸாத் தொகுதி 7 பக்கம் 276 – 1985 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

**நீங்கள் ஆணவத்திலிருந்து விலகுங்கள் என்று எனது ஜமாஅத்திற்கு அறிவுரை செய்கின்றேன். ஏனென்றால், நாம் ஆணவம் கொள்வது, கம்பீரமும் வல்லமையும் கொண்ட இறைவனது பார்வையில் வெறுக்கத்தக்க ஒன்றாகும்.**

(நுஸூலுல் மஸீஹ், ரூஹானி கஸாயின் தொகுதி 18 பக்கம் 402)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஜ்ஜதுல் விதா சந்தர்ப்பத்தில் கூறினார்கள்:

**மனித சமுதாயங்களைச் சார்ந்த நீங்கள் எந்தவொரு சமுதாயத்தையும் சார்ந்திருக்கலாம். ஆனால் மனிதன் என்ற**

**ரீதியில் உங்களுக்கு ஓர் அந்தஸ்து உள்ளது. மனிதர்கள் அனைவரும் சமமானவர்களே. கருப்பருக்கு வெள்ளையர் மீதும், வெள்ளையருக்கு கருப்பர் மீதும், அரபிகளுக்கு அரபிகள் அல்லாதவர் மீதும், அரபி அல்லாதவர்களுக்கு அரபிகள் மீதும் எந்த மேன்மையும் கிடையாது.**

(அல் ஜாமிவுஷ் ஷஅபுல் ஈமான் தொகுதி 7 பக்கம் 132 ஹதீஸ் எண் 4774)

எனவே நமது போதனை என்பது சமமான கல்வியாகும். ஆணவத்திலிருந்து தப்பிப்பதற்கும், தற்பெருமையிலிருந்து விலகுவதற்கும் வழங்கப்பட்ட போதனை என்னவென்றால், நாம் நம்மில் ஒவ்வொருவரும் அதன்படி அமல் செய்ய வேண்டும். அந்நியர்களின் உலகில் வெள்ளையர், கருப்பர் என்ற வித்தியாசம் உள்ளது. ஆனால் தற்போது சிலர் வாதம் செய்கின்றார்கள். சில தலைவர்கள் வெள்ளையர்களாக இருப்பதனால் அதிகமான மூளை அவர்களுக்கு இருக்கின்றது. திறமைகள் இருக்கின்றன என்று கூறுகின்றனர். மேலும் வெள்ளையர்கள் அல்லாதவர்களுக்கு அவர்கள் கருணை செய்துள்ளனர் என்றும் வாதிடுகின்றனர். இது அவர்களின் ஆணவத்தின் நிலையாகும். ஒவ்வோர் அஹ்மதியும் இதிலிருந்து தப்பித்திருப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

**இன்று இரண்டு வெவ்வேறு சந்தர்ப்பங்களில் என்னிடம் சபைகளில் பெண் பிள்ளைகள் இதனை வெளிப்படுத்தினர். அதாவது அமெரிக்காவின் ஜமாஅத்துகளில் சில வகையான இன வேறுபாடுகள் காணப்படுகின்றன. எந்த காரணத்தினாலும் இளைஞர்களிடம் இந்த எண்ணம் தோன்றினாலும் அது முற்றிலும் தவறாகும். இந்த கேள்வி ஏன் எழுகின்றது? என்பதை லஜ்னா அமைப்பும், குத்தாம் மற்றும் அன்ஸார் அமைப்பும் மேலும் ஜமாஅத்தின் தர்பிய்யத் அமைப்பும் இவ்விஷயத்தை ஆய்வு செய்ய வேண்டும். ஒருவேளை இவ்விவகாரத்தில் உண்மை இருக்குமென்றால் அதனை ஹிக்மத்துடனும் அன்புடனும் அந்த எண்ணங்களை அகற்றுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். மேலும் தர்பிய்யத்தும் வழங்க வேண்டும்.**

எந்தவொரு அமைப்பும், பொறுப்பாளரும் அவசர கோலத்தில் இவ்விவகாரத்தில் செயல்படுவதற்கும், அல்லது முடிவெடுப்பதற்கும் அவசியமில்லை. அல்லது யார் இதனை கூறினார். யார் இதனை கூறவில்லை என்று தேடி அவரை பின்தொடர வேண்டிய அவசியமுமில்லை. மாறாக, இதில் உண்மை உள்ளதா? இல்லையா? என்று பார்க்க வேண்டும். தனிப்பட்ட பகைமையின் காரணமாக இந்த விஷயங்கள் உருவாகின்றனவா? என்று பார்க்க வேண்டும்.

எந்நிலையிலும் காரணம் என்னவாக இருந்தாலும் அன்பு, நுட்பமான ஞானத்துடன் தீமைகளை நம்மிடமிருந்து அகற்ற வேண்டும். என்னிடத்தில் எந்த குழந்தை இது பற்றி கூறியதோ அவரிடம் கூட நான் கூறியது இதுதான். நீங்கள் விரிவாக எனக்கு கடிதம் எழுதி அனுப்புங்கள். எந்த காரணத்தினால் உங்களுக்கு இப்படிப்பட்ட எண்ணம் தோன்றியது என்றும், ஜமாஅத்தில் இன வேறுபாடு உருவாகி வருகின்றது என்பதற்கான சான்றையும் விரிவாக எனக்கு எழுதும்படி கூறியுள்ளேன். எவ்வாறிருப்பினும் இதுவும் ஒருவகை ஆணவம் ஆகும். நாம் எல்லா வகையான ஆணவத்திலிருந்தும் விலகி இருக்க வேண்டும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கவனமூட்டியுள்ள ஒரு விஷயம் என்னவென்றால், அது தொடர்பாக அல்லாஹ்வும் கூறியுள்ளான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் வழிகாட்டியுள்ளார்கள். அல்லாஹ்வின் அருளால் முழு உலகத்திலும் ஜமாஅத்துகள் பொருள் தியாகத்தில் முன்னேறி வருகின்றன. அசாதாரண மற்றும் தற்காலிகப் பொருள் தியாகங்களில் அமெரிக்காவிலுள்ள அஹ்மதிய்யா ஜமாஅத்தும் முழுமையாக பங்கு பெறுவதற்கு முயற்சி செய்கின்றன. ஆனால் பொதுவாக ஒரு பொருளாதார அமைப்பு உள்ளது. சந்தா வசூல் செய்வது போன்ற விவகாரங்கள் உள்ளன.

இங்கும் கூட நமது பார்வைக்கு வருகின்ற புள்ளிவிவரங்களைப் பார்க்கும் போது அதில் குறைபாடுள்ளது தெரிய வருகின்றது. இதன் பக்கம் கவனம் செலுத்துவது அவசியமாகும். **ஒரு ஏழை நபர் தனது நிர்பந்தத்தை எடுத்து வைத்து சந்தா வழங்குவதில் சலுகை பெறுவதற்கும் அல்லது அளவீட்டை குறைத்துக் கொள்வதற்கும் அனுமதி பெற்றுக் கொள்ளலாம். ஆனால் நல்ல வருமானம் உடைய மக்கள் இருக்கின்றார்கள். அவர்கள் தங்களை ஆய்வு செய்ய வேண்டும். தமது வருமானத்திற்கேற்ப சந்தா கொடுக்கின்றார்களா? இல்லையா? என்று அவர்கள் பார்க்க வேண்டும். எவ்வாறு வரி செலுத்துவதிலிருந்து தப்பிப்பதற்குப் பல மாற்றங்களைச் செய்து கொள்கின்றார்களோ அதுபோன்று சந்தா விவகாரத்திலும் செய்யக் கூடாது. மாறாக, வருமானத்தைப் பார்க்க வேண்டும். ஏனென்றால் இந்த சந்தா விவகாரம் இறைவனிடம் தொடர்புடைய விவகாரமாகும்.**

பொருளாளர் அல்லது ஜமாஅத் அமைப்பிற்கு யாருடைய வருமானம் எவ்வளவு என்றோ அல்லது எவ்வளவு அவர் சந்தா கொடுக்கின்றார் என்றோ தெரியாது. ஆனால் அல்லாஹ்விற்கு தெரியும். அவன் உள்ளங்களின் நிலைகளை நன்கு அறிகின்றான்.

**சரியான அளவீட்டின் அடிப்படையில் மக்கள் சந்தா கொடுக்க தொடங்கி விட்டால் பின்னர் பள்ளிவாசல்கள் கட்டுவதற்கும் ஜமாஅத்தின் ஏனைய பணிகளுக்காகவும் தனியாக வசூல் செய்வதற்கு மிகக்குறைவான சந்தர்ப்பமே ஏற்படும் என்று நான் கருதுகின்றேன். எனவே இந்த அடிப்படையில் உங்கள் நீங்கள் ஆய்வு செய்து பாருங்கள். உங்களது சந்தா ஆம் பட்ஜெட்டை மீண்டும் ஆய்வு செய்து சந்தாக்களை மீண்டும் எழுதுங்கள். எவர்கள் குறைவாக எழுதியுள்ளார்களோ அவர்கள் அதனைச் சரி செய்யுங்கள்.**

நான் பல்வேறு நாடுகளின் புதிய அஹ்மதிகளின் சம்பவங்களை எடுத்துக் கூறி வருகின்றேன். அவர்களுக்கு எவ்வாறு அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொண்ட பிறகு தங்களிடத்தில் மாற்றங்கள் ஏற்பட்டன. ஆன்மீக மாறுதல்கள் எவ்வாறு ஏற்பட்டன. செயல் ரீதியாக இறை வணக்கங்களின் பக்கம் எவ்வாறு கவனம் செலுத்துகின்றனர். பொருள் தியாகத்தின் முக்கியத்துவத்தையும் அவர்கள் உணர்கின்றனர் என்பதையெல்லாம் நான் கூறுவதுண்டு.

அடுத்து அல்லாஹ்வும் அவர்களது ஏழ்மை நிலையை பொருளாதார செழிப்பாக மாற்றி விடுகின்றான். அதன் காரணமாக அவர்கள் தங்கள் ஈமானிலும் நன்றி உணர்விலும் முன்னேறுகின்றார்கள். குர்பானி என்ற சொல்லின் பொருளே இதுதான். குர்பானி என்ற சொல்லானது தன்னைத் துன்பத்தில் ஆழ்த்திக் கொண்டு ஒரு பணியை செய்வது என்பதன் பெயராகும்.

இங்கு துன்பத்தில் ஆழ்த்திக் கொண்டு அல்லாஹ்வின் மார்க்கத்தின் தேவைகளுக்காகச் செலவிடுதல் என்று பொருள்படும். எனவே **தனது வசதிவாய்ப்பிற்கேற்ப கொஞ்சம் கொடுத்து விட்டு நாம் தியாகம் செய்து விட்டோம் என்று கருதினால் மட்டும் அது தியாகமாகி விடாது. மேலும் அப்படிப்பட்டவர்கள் அல்லாஹ்வின் மீது எந்த கருணையும் செய்து விடவில்லை. அவர்கள் கொடுக்கவில்லை என்றால் அல்லாஹ்வின் மார்க்கத்தின் தேவைகளை முழுமை செய்வதற்கான ஏற்பாட்டை அல்லாஹ்வே**

**செய்து விடுவான். செய்தும் கொண்டிருக்கின்றான். செய்து கொண்டும் வருவான். இன்ஷா அல்லாஹ். எனவே எவர்கள் செல்வ செழிப்பின் நிலையிலும் கூட தனது வருமானத்திற்கேற்ப சந்தா கொடுப்பதில்லையோ அவர்களுக்கு நான் கவனமூட்டுகின்றேன். நீங்கள் அல்லாஹ்வின் அருள்களுக்கு வாரிசாகுங்கள்.**

**இன்று நான் கடைசியாக கவனமூட்ட விரும்புகின்ற விஷயம் கட்டுப்படுதல் ஆகும்.** திருக்குர்ஆனின் எண்ணற்ற இடங்களில் அல்லாஹ்விற்கும் அவனது தூதருக்கும் கட்டுப்படுவதற்கான கட்டளை வந்துள்ளது. பின்னர் ஆட்சியாளர்களுக்கு கட்டுப்படுவதற்கும் கட்டளை உள்ளது. அடுத்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் தமது பைஅத் நிபந்தனைகளில் ஒரு நிபந்தனையாகக் கட்டுப்படுதல் என்ற நிபந்தனையை வைத்துள்ளார்கள். நல்ல விஷயங்களில் கட்டுப்படுவேன் என்ற உடன்படிக்கையில் மரணம் வரை நிலைத்து நிற்போம் என்பது அந்த நிபந்தனையாகும்.

(இஸாலா அவ்ஹாம், ரூஹானீ கஸாயின் தொகுதி 3 பக்கம் 564)

நமது உறுதிமொழிகளில் குறிப்பாகக் கிளை அமைப்புகளின் உறுதிமொழிகளில் இந்த சொற்கள் இடம் பெற்றுள்ளன. அதாவது காலத்தின் கலீஃபா என்ன நல்ல தீர்மானங்கள் எடுக்கின்றார்களோ அதற்குக் கட்டுப்படுவதை நான் அவசியமாக கருதுவேன்.

**சில கோணல் புத்தியுள்ள மனிதர்கள் அல்லது நயவஞ்ச சிந்தனை கொண்ட மக்கள் இவ்வாறு கூறி வருகின்றனர். அதாவது நல்ல தீர்மானங்களில் கட்டுப்பட வேண்டும் என்றே உள்ளது. காலத்தின் கலீஃபாவின் சில தீர்மானங்கள் நல்ல தீர்மானங்களாக இருப்பதில்லை என்று கூறுகின்றனர். அவர்களின் பார்வையில் அது நல்ல தீர்மானமாக இருப்பதில்லை. இது போன்ற விளக்கங்களைக் கொடுக்கக்கூடிய மக்கள் உலகத்தின் பல்வேறு பகுதிகளில் இருக்கின்றனர். ஒருவர் இருவராகக் கூட இருக்கலாம். நிச்சயமாக லட்சத்தில் ஒருவர் கூட அப்படிப்பட்டவர் இருக்கலாம்.**

**ஆனால் எப்படி இருப்பினும் இந்த சிந்தனை நிராகரிக்கப்பட வேண்டிய சிந்தனையாகும். ஏனென்றால் இந்த சிந்தனை இளம் தலைமுறையின் உள்ளங்களில் நஞ்சை கலக்கின்றது. இவ்வாறு ஒருவர் சுயமாக நல்ல தீர்மானத்திற்கான விளக்கங்களைக் கொடுக்கத் துவங்கி விட்டால் பின்னர் ஜமாஅத்தின் ஒற்றுமை நிலைபெற முடியாது. மேலும் எது நல்ல தீர்மானம்? எது நல்ல தீர்மானம் இல்லை? என்ற விவாதமும் தொடங்கி விடும்.**

ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் ஒரிடத்தில் இதற்கு விளக்கமளித்தவாறு கூறுகின்றார்கள்:

கட்டுப்படுதல் மற்றும் நல்ல தீர்மானங்களை புரிவதில் அவர்களுக்கு மற்றும் ஒரு தவறு ஏற்படுகின்றது. நாங்கள் எதனை நல்ல தீர்மானமாகக் கருத மாட்டோமோ அதற்கு நாங்கள் கட்டுப்பட மாட்டோம் என்பது அதற்குப் பொருள் என்று கூறுகின்றனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கும் இந்த சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. திருக்குர்ஆனில் வருகின்றது. وَلَا يَعْصِينَكَ فِي مَعْرُوفٍ அதாவது நல்ல விஷயங்களில் நாங்கள் கட்டுப்படுவோம் என்று பொருள்படும்.

ஹஸ்ரத் முதலாவது கலீஃபா அவர்கள் கூறுகின்றார்கள்: இப்போது இதுபோன்ற மக்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமும் குறை கண்டு பட்டியல் போட்டு விட்டார்களா என்ன? அவர்கள் என்ன என்ன நல்ல விஷயங்களைப் பேசுவார்கள்? என்ன என்ன தவறான விஷயங்களைப் பேசுவார்கள் என்று இவர்கள் பட்டியலிட்டு விட்டார்களா? நவூதுபில்லாஹ் மின் தாலிக்.

(ஹகாயிகுல் ஃபுர்கான் தொகுதி 4 பக்கம் 75,76)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நல்ல தீர்மானங்கள் என்பதற்கு விளக்கமளித்தவாறு கூறுகின்றார்கள்: நபி அறிவிற்கு எதிரான விஷயங்களை செய்வதற்குக் கட்டளையிட மாட்டார்.

(பராஹீனே அஹ்மதிய்யா பாகம் 5, ரூஹானீ கஸாயின் தொகுதி 21 பக்கம் 420)

அதாவது **நல்ல தீர்மானங்கள் என்பது எவை அறிவிற்கு ஏற்புடையதாகவும், திருக்குர்ஆனின் கட்டளைகளுக்கும் ஏற்புடையதாகவும் இருக்கின்றதோ அவையே ஆகும்.**

மேலும் ஒரு ஹதீஸில் ஒரு சம்பவம் வருகின்றது. **ஓர் இடத்திற்கு ஒரு குழுவினர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களால் அனுப்பி வைக்கப்பட்டனர். அங்கு சென்ற பிறகு மக்கள் நெருப்பை மூட்டினர். அப்போது அக்கூட்டத்தின் அமீர் நகைச்சுவைக்காக இவ்வாறு கூறினார். நான் உங்களை இந்த நெருப்பில் குதிக்கும்படி கூறினால் நீங்கள் குதித்து விடுவீர்களா? என்று கேட்டார். அதற்கு சிலர், இது முற்றிலும் தவறாகும். இது தற்கொலையாகும் என்று கூறினார். சிலர், அமீருக்கு கட்டுப்படுவது அவசியமாகும் என்று கூறினார்.**

**ஆனால் ஒரு வழியாக அமீர், நான் வேடிக்கையாக இதை கூறினேன் என்று கூறி விட்டார். விஷயமும் அத்தோடு முடிந்து விட்டது. மதீனா வந்தடைந்ததும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இந்த சம்பவம் கூறப்பட்டது. அமீர்மார்களில் எவர்கள் அல்லாஹ்விற்கு கட்டுப்படாமல் இருப்பதற்கு கட்டளையிடுவார்களோ அக்கட்டளைகளுக்கு நீங்கள் கட்டுப்படாதீர்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.**

(சுனன் அபீ தாவூது, கிதாபுல் ஜிஹாது... ஹதீஸ் எண் 2625)

இதுதான் நல்ல தீர்மானங்களுக்கான விளக்கமாகும். **அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு எதிராக ஒரு கட்டளை தரப்பட்டால் அவை நல்ல தீர்மானங்கள் என்று கூற முடியாது. ஆனால் அல்லாஹ்விற்கும் அவனது தூதருக்கும் ஏற்புடைய கட்டளைகள் வழங்கப்பட்டால் அவை நல்ல தீர்மானங்கள் ஆகும்.** எனவே நல்ல தீர்மானங்களுக்குக் கட்டுப்படுதல் என்ற உடன்படிக்கையைப் பேணுதல் அவசியமாகும் என்பது தெளிவாகி விட வேண்டும். நல்ல தீர்மானங்கள் என்பவை அல்லாஹ்வின் கட்டளைகள் மற்றும் அவனது தூதரின் கட்டளையாகும்.

**எனவே உண்மையான கிலாஃபத் நிலைபெற்றிருக்கும் வரை ஒருபோதும் இந்த கிலாஃபத் அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் கட்டளைக்கு எதிராக எந்த தீர்மானமும் எடுக்காது. திருக்குர்ஆன் மற்றும் சுன்னத்திற்கு ஏற்பவுமே கிலாஃபத் தொடரும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது முன்னறிவிப்பிற்கேற்ப இந்த கிலாஃபத் இன்ஷா அல்லாஹ் நிலைபெற்றிருக்கும்.**

நன்மையான தீர்மானங்களுக்குக் கட்டுப்படுதல் என்ற சொல் நான் ஏற்கனவே கூறியதற்கேற்ப திருக்குர்ஆனில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்காவும் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் தனது பைஅத் நிபந்தனைகளில் இந்தச் சொல்லை பயன்படுத்தியுள்ளார்கள். அஹ்மதிய்யா கிலாஃபத்தும் ஒவ்வொரு உறுதிமொழியிலும் இதனை இணைத்தள்ளது. இதன் பொருள் மிகத் தெளிவாகும். அதாவது **ஜமாஅத்துடன் தொடர்புடைய காலத்தின் கலீஃபாவால் வழங்கப்படுகின்ற வழிகாட்டல்களின்படி செயல்படுவது ஜமாஅத்தின் அங்கமாக தம்மைக் கருதுகின்ற ஒவ்வொரு நபரின் மீதும் கடமையாகும்.**

**ஒவ்வோர் அஹ்மதியும் இந்த உடன்படிக்கையை பேணியவாறு காலத்தின் கலீஃபா ஜமாஅத்திற்கு வழங்குகின்ற வழிகாட்டல்களின்படி நடக்க வேண்டும். இது ஒவ்வோர் அஹ்மதியின் கடமையாகும்.**

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களும் கூறியுள்ளார்கள்:

**கிலாஃபத்தை இறைவனே பாதுகாக்கின்றான். எனவே ஒருவேளை சில தவறான வழிகாட்டுதல் இருந்தாலும் கூட அல்லாஹ் ஒருபோதும் அதன் மூலம் தீய விளைவுகளை ஏற்பட அனுமதிக்க மாட்டான். அதனால் நல்ல விளைவுகளையே ஏற்பட அல்லாஹ் சூழ்நிலையை உருவாக்கி விடுவான்.**

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 6 பக்கம் 376,377 – சூரா அந்நூரின் 56 வது வசனத்திற்கு விளக்கம்)

**எனவே நல்ல தீர்மானங்கள் எது என்பதற்கு விளக்கம் கொடுப்பது ஒரு தனி நபரின் பணி அல்ல. நல்ல தீர்மானங்கள் என்பது திருக்குர்ஆனுக்கும் சுன்னத்திற்கும் ஏற்புடையதாகும். மேலும் ஹதீஸிற்கும் ஏற்புடையதாகும். மேலும் இக்காலத்தில் தோன்றியுள்ள நீதி நெறி தீர்ப்பவரின் கட்டளைகளுக்கு ஏற்புடையதாகும்.**

இந்த ஒரேயொரு வழிமுறையின் மூலமாகத்தான் ஜமாஅத்தின் ஒருமைப்பாடு நிலைபெற்றிருக்க முடியும். மேலும் இந்த நோக்கத்திற்காகத்தான் அதாவது ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கும் கலப்பற்ற தன்மை கொண்ட கட்டுப்படக்கூடிய ஒரு ஜமாஅத்தை உருவாக்க வேண்டும் என்பதுதான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வருகையின் நோக்கமும் ஆகும். **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எண்ணிக்கையை அதிகரிப்பது எனது நோக்கமல்ல என்று தெளிவாகக் கூறி விட்டார்கள். என் ஜமாஅத்தில் இணைந்து எனக்குக் கட்டுப்படுவதை அறியாத மக்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது எனது நோக்கமல்ல.**

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்:

**எனது ஜமாஅத்தில் இணைந்து எனது பைஅத்தில் வரக்கூடியவர்கள் சீர்திருந்தவில்லை என்றால் அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் போதனைகளுக்கேற்ப தனது வாழ்க்கையை கழிக்கவில்லை என்றால் அந்த நபரின் பைஅத் பயனற்றதாகும்.**

(முவாஹிபுர் ரஹ்மான், ரூஹானீ கஸாயின் தொகுதி 19 பக்கம் 276 & மல்ஃபூஸாத் தொகுதி 6 பக்கம் 142 & மல்ஃபூஸாத் தொகுதி 10 பக்கம் 334)

எனவே நாம் இந்த உண்மைத்துவத்தைப் புரிந்து அதன்படி செயல்பட முயற்சி செய்யும்போதுதான் நாம் அஹ்மதியானது நமக்கு பயன் தரும். மேலும் அதற்காக நமது அனைத்து ஆற்றல்களுடனும் முயற்சியும் செய்ய வேண்டும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

**கட்டுப்படுதல் என்பது ஒன்றும் சிறிய காரியமல்ல. அது எளிய காரியமும் அல்ல. அது ஒருவகையான மரணமாகும். எந்த நபர் முழுமையாக கட்டுப்படுவதில்லையோ அவர் இந்த ஜமாஅத்தை அவப்பெயருக்கு ஆளாக்குகின்றார்.**

(மல்ஃபூஸாத் தொகுதி 4 பக்கம் 74 – 1985 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

**நான் பல முறை ஜமாஅத்திற்குக் கூறியுள்ளேன். நீங்கள் வெறும் பெயர் அளவிலான பைஅத்தின் மீது மட்டும் நம்பிக்கை கொள்ளாதீர்கள். அதன் உண்மைத்துவம் வரை நீங்கள் சென்றடையாத வரை நீங்கள் இரட்சிப்பைப் பெற முடியாது.**

(மல்ஃபூஸாத் தொகுதி 4 பக்கம் 232,233 – 1985 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

அல்லாஹ் நம் அனைவருக்கும் இஸ்லாத்தின் உண்மையைப் புரிந்து அதன்படி அமல் செய்வதற்கான நற்பாக்கித்தை வழங்குவானாக. மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் செய்த பைஅத்தின் உரிமைகளை நிறைவேற்றக் கூடியவர்களாக நாம் திகழ்வோமாக.

மேலும் கிலாஃபத்துடன் எப்போதும் முழுமையாக கட்டுப்பட்டவர்களாக தொடர்புடைய மக்களாக நாம் இருப்போமாக. காலத்தின் கலீஃபாவின் அனைத்து தீர்மானங்களுக்கும் உண்மையான உள்ளத்துடனும் முழுமையான கட்டுப்படுதலுடனும் செயல்படக் கூடியவர்களாக நாம் இருப்போமாக. அல்லாஹ் அனைவருக்கும் அதற்குரிய பாக்கியத்தை வழங்குவானாக.

## தொழுகையை நிலைநாட்டுங்கள்

**இரவில் எழுங்கள். அல்லாஹ் தஆலா உங்களுக்கு தனது வழிகாட்டலை வழங்க துஆ செய்யுங்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது சஹாபாக்களும் கூட படிப்படியாகத்தான் சீர்திருத்தத்தை பெற்றார்கள். முதலில் அவர்கள் எப்படி இருந்தார்கள்? ஒரு விவசாயி விதைத்த விதைகள் போன்று இருந்தார்கள். பின்னர் அன்னார்தான் நீர்ப்பாய்ச்சினார்கள். அவர்கள் தமது தோழர்களுக்காக துஆ செய்தார்கள்.**

**விதை சரியாக இருந்தது. அது விதைக்கப்பட்ட நிலமும் சிறந்ததாக இருந்தது. அதனால் அந்த நீர்ப்பாச்சியதன் விளைவாக நல்ல கனிகள் வெளிவந்தன..... நீங்களும் உண்மையான உள்ளத்துடன் தவ்பா செய்யுங்கள். தஹஜ்ஜுத் தொழ எழுங்கள். துஆ செய்யுங்கள். உள்ளத்தைச் சீர்திருத்துங்கள். பலவீனங்களை விட்டு விடுங்கள். மேலும் இறைவனது திருப்திக்கேற்ப உங்களது சொல்லையும் செயலையும் அமைத்துக் கொள்ளுங்கள்.**

**(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 28 புதிய பதிப்பு)**

رَبَّنَا اغْفِرْ لَنَا ذُنُوبَنَا وَإِسْرَافَنَا فِيٓ أَمْرِنَا وَثَبِّتْ أَقْدَامَنَا وَانْصُرْنَا عَلَى الْقَوْمِ الْكٰفِرِيْنَ

பொருள்: எங்கள் இறைவா! எங்கள் குற்றங்களையும், எங்கள் செயல்களில் எங்களின் வரம்பு மீறுதல்களையும் எங்களுக்கு மன்னித்தருள்வாயாக! எங்கள் காலடிகளை உறுதிப்படுத்துவாயாக. மேலும் நிராகரிக்கும் மக்களுக்கு எதிராக எங்களுக்கு உதவி செய்வாயாக. (3:148)

*நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்*

தினந்தோறும் காலை 9.00 மணியிலிருந்து 11.00 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

**தொலைபேசி எண்:**

***1800 425 40000***

இந்த **TOLL FREE** எண்ணில் ஃபோன் செய்து அஹ்மதிய்யா ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

EDITOR
O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
A. KHALEEL AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

The Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 3 Thursday 29 November 2018 Issue No. 48

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

*(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)*

மூன்றாவது நிலை உங்களிடையே உண்டாகிறது. உதாரணமாக, உங்கள் மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படுகிறது. உங்களை நாசமாக்கும் பொருட்டு உங்களுக்கு விரோதமாய் சாட்சியங்கள் அளிக்கப்பட்டுள்ளன. இது உங்களை உணர்விழக்கச் செய்யக்கூடிய சமயமாகும். மேலும் நீங்கள் உங்களை ஒரு கைதியாக நம்பத் தொடங்குகிறீர்கள். ஆகவே இந்நிலை சூரியன் மறைவதற்கும் பகற்பொழுதின் பிரகாசத்தின் மீதுள்ள நம்பிக்கை அனைத்தும் இழக்கப்படக்கூடிய சமயத்திற்கும் ஒப்பானதாகும்.

ஆகவே இந்த ஆன்மீக நிலைக்கு எதிராக மக்ரிப் என்னும் முன் இரவுத் தொழுகையானது நியமிக்கப்பட்டுள்ளது. எப்போது உங்கள் மீது ஆபத்து வந்து விடுகிறதோ, மேலும் அதன் கடுமையான இருள் உங்களைச் சூழ்ந்து விடுகிறதோ அச்சமயத்தில்தான் உங்களுடைய நான்காவது நிலை உண்டாகிறது.

உதாரணமாக, உங்கள் மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுச் சாட்சியங்களும் முடிந்ததற்குப் பின்னர் உங்கள் மீது தண்டனைக்குரிய தீர்ப்பு கூறப்படுகிறது. உங்களைக் கைது செய்யுமாறு காவலரிடம் ஒப்படைக்கப்படுகிறீர்கள். ஆகவே இந்நிலை இரவு உண்டாவதற்கும் கடுமையான இருள் சூழக்கூடிய சமயத்திற்கும் ஒப்பானதாய் இருக்கிறது.

ஆகவே இந்த ஆன்மீக நிலைக்கு எதிராக இஷா என்னும் இரவுத் தொழுகையானது நியமிக்கப்பட்டுள்ளது. பின்னர் நீங்கள் ஒரு குறிப்பிட்ட காலம் வரை இந்தச் சங்கடமான இருளை கடந்து கொண்டிருக்கையில் ஐந்தாவது நிலையாக இறைவனது கருணையானது உங்கள் மீது பீரிட்டெழுந்து உங்களை அந்த இருளிலிருந்து விடுவித்து விமோசனம் அளிக்கிறது. உதாரணமாக, இருளுக்குப் பின்னர் மீண்டும் காலை உதயமாகி அதே பகலின் ஒளி தனது சக்தியுடன் வெளிப்படுகிறது. இந்த ஆன்மீக நிலைக்கு எதிராக பஜ்ர் என்னும் அதிகாலைத் தொழுகையானது நியமிக்கப்பட்டுள்ளது.

ஆகவே இயற்கையாக உங்களில் அமைந்துள்ள மாற்றங்களின் ஐந்து நிலைகளை முன் வைத்து ஐந்து நேரத் தொழுகைகளை இறைவன் உங்களுக்காக ஏற்படுத்தியுள்ளான். இத்தொழுகைகள் விசேஷமாக உங்களின் ஆன்மாவின் நலனுக்காக அமைந்துள்ளவையாகும் என்பதனை இதிலிருந்து நீங்கள் புரிந்து கொள்ள இயலும். அதனால் நீங்கள் இந்த ஆபத்திலிருந்து தப்ப வேண்டுமென்றால் இந்த ஐந்து நேரத் தொழுகைகளையும் விட்டு விடாதீர்கள். அவை உங்கள் அகத்திலும் ஆன்மீகத்திலும் மாற்றங்களை உண்டாக்குகின்ற நிழல்களாகும்.

**வரக்கூடிய ஆபத்துகளுக்கு தொழுகைகளில் தக்க பரிகாரம் இருக்கின்றது. வரக்கூடிய ஒவ்வொரு புதிய நாளும் உங்களுக்கு எத்தகைய விதியைக் கொண்டு வரும் என்பதை நீங்கள் அறிய மாட்டீர்கள். ஆதனால் சூரியன் உதயம் ஆவதற்கு முன்பே அது உங்களுக்கு நன்னாளாகவும் பாக்கியமுள்ள நாளாகவும் இருக்க நீங்கள் உங்கள் எஜமானனின் முன்பு மன உருக்கத்துடன் கெஞ்சிப் பிரார்த்தனை செய்து வாருங்கள்.**

**தலைவர்களே! அரசர்களே! செல்வந்தர்களே! உங்களிடையே இறைவனுக்கு அஞ்சுகிறவர்களும் அவன் காட்டித் தந்த எல்லாப் பாதைகளிலும் நேர்மையாகச் செயல்படக் கூடியவர்களும் மிகக் குறைவாகவே காணப்படுகிறார்கள். மேலும் பெரும்பாலானவர்கள் உலகச் செல்வங்கள் மீதே பற்று கொண்டவர்களாகவும் அதிலேயே தமது காலத்தைக் கழிக்கக் கூடியவர்களாகவும் இருக்கிறார்களே தவிர அவர்களில் யாரும் மரணத்தைப் பற்றிச் சிறிதும் நினைவில் கொள்வதில்லை.**

**தொழுகையைக் கடைப்பிடிக்காமலும் இறைவனைவிட்டுக் கவனமில்லாதவர்களாகவும் இருக்கும் ஒவ்வொரு எஜமானன் மீதும் அவரது ஊழியர்கள் செய்யும் எல்லாப் பாவங்களும் அந்த எஜமானனின் பிடரியின் மீதே வந்து விழும். மேலும் மதுபானம் அருந்தும் ஒவ்வொரு எஜமானனின் கீழ் பணியாற்றும் ஊழியர்களும் அவருடன் மதுபானம் அருந்துவதில் பங்கு கொண்டவர்களாயின் அவர்களின் பாவமும் அந்த எஜமானனின் பிடரியின் மீதே விழும்.**

**அறிவாளிகளே! இவ்வுலகமானது நிலையான ஓர் இடமல்ல. ஆகவே நீங்கள் எல்லா விதமான அநீதிகளையும் விட்டு விடுங்கள். போதையை விளைவிக்கக்கூடிய ஒவ்வொரு பொருளையும் விட்டொழித்து விடுங்கள். மனிதனை நாசமாக்கக் கூடியது மது மாத்திரம் அல்ல. மேலும் எப்போதும் வழக்கமாக்கிக் கொண்டிருக்கின்ற அபின், கஞ்சா, சரஸ், பங்கு, கள் முதலான போதைப் பொருட்களையும் நீங்கள் விட்டு விடுங்கள். அவை மூளையைக் கெடுத்து விடுவதுமட்டுமல்லாமல் இறுதியில் மனிதனையே அழித்து விடுகின்றன. ஆகவே இவற்றிலிருந்து நீங்கள் தப்பித்துக் கொள்ளுங்கள்.**

**நீங்கள் இப்பொருட்களை ஏன் உபயோகித்து வருகிறீர்கள் என்பதை நம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை. இவற்றின் தீங்கினால் உங்களைப் போன்றவர்கள் போதைப் பொருட்களுக்கு அடிமையாகி ஒவ்வொரு☆ ஆண்டும் ஆயிரக்கணக்கில் இவ்வுலகத்தை விட்டும் பிரிந்து கொண்டிருக்கிறார்கள். இதுபோக இத்தகையவர்களுக்கு மறுமையின் ஆக்கினை வேறு இருக்கிறது.**

(கிஷ்தி நூஹ், ரூஹானீ கஸாயின் தொகுதி 19 பக்கம் 68–71)

☆ அடிக்குறிப்பு: ஐரோப்பாவில் எந்த அளவில் மதுபானம் நஷ்டத்தை விளைவித்ததோ அதற்குக் காரணம் ஈஸா (அலை) மதுபானம் அருந்தி வந்ததேயாகும். ஒருவேளை ஏதாவது நோயின் காரணத்தால் அல்லது பழைய பழக்கத்தின் காரணத்தால் அவர்கள் அதனை உபயோகித்திருக்கலாம். ஆனால் முஸ்லிம்களே! உங்களுக்கு திருநபி (ஸல்) அவர்கள் இயற்கையாகவே பாவமற்றவர்களாக இருந்ததைப் போன்றே ஒவ்வொரு விதமான போதையிலிருந்தும் விடுபட்டுத் தூய்மையானவர்களாவும் பாவமற்றவர்களாகவும் இருந்தார்கள். ஆதலால் நீங்கள் உங்களை முஸ்லிம்கள் என்று அழைத்துக் கொண்டு நீங்கள் யாரைப் பின்பற்றுகின்றீர்கள்? திருக்குர்ஆனானது பைபிளின் புதிய ஏற்பாட்டைப் போல் மதுவை ஹலால் (ஆகுமானது) ஆக்கவில்லை. இவ்வாறிருக்க நீங்கள் எந்த ஆதாரத்தைக் கொண்டு மதுவை ஹலால் (ஆகுமானது) ஆகக் கொள்கிறீர்கள்? நீங்கள் மரணிக்கப் போவதில்லையா?

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad